1350

# குமரி மலர்

3அ

பதிப்பாசிரியர்

ஏ. கே. செட்டியார்

50 காசு

Grams: YESIND PHONE: { Office: 127
Mill : 174

# ஸ்ரீ கோதண்டராம் ஸ்பின்னிங் மில்ஸ்

ஸ்ரீ கோதாண்டராம் ஸ்பின்னிங் மில்ஸ் ரோடு

மாகாளிப்பட்டி

மதுரை.

---

கைத்தறிக்கு வேண்டிய நூலும்
விசைத்தறிக்கு வேண்டிய நூலும்
தயாரிப்பவர்கள்.



பொரபுதூரிலுள்ள தியான புத்தர்.

எம். கே. கிருஷ்ண செட்டியார்

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்.

## ANNOUNCEMENT.



# "TEXTOOL"

TAKES PRIDE TO ANNOUNCE
THAT THEIR 4 CYLINDER
36 To 86 H. P.
AUTOMOTIVE DIESEL ENGINES


will be out in the market Soon!!
Await Further News !!!

MANUFACTURERS:-

**Textool Company Limited,**
**Post Box No. 221,**
**COIMBATORE.**

**Phone:** 409
1409

**Gram:**
'TEXTOLCO'




VUMMIDI
RAMIAH CHETTY
GURUSWAMY CHETTY & CO.
JEWELLERS
23-25, CHINA BAZAAR ROAD
MADRAS

மலர் 16 குமரிமலர் இதழ் 6

விகாரி - புரட்டாசி

# உள்ளுறை

பக்கம்

1. வறுமையின் பெருமை
—காந்தியடிகள் 1
2. உபசாரப் பத்திரங்கள்
—காந்தியடிகள் 4
3. சுவாமி விவேகாநந்தரின் கடிதம் 6
4. நல்லுரை 9
5. சித்தக் கோளாறுகள்
—ராஜாஜி 12
6. பிரிட்டனில் போலீஸ் படை 19
7. இளைஞர் உணவு விடுதி 31
8. கொய்த மலர்கள் 35
9. ஹூவர் அணை 47
10. குடியாட்சி முறை
—ஆட்லி பிரபு 51
11. தழை உர உபயோகம் 64
12. பொன் மயில்
—சாக்யன் 71
13. மின்மினிப் பூச்சி 76
14. உலக இசை பாங்கு 79

# வறுமையின் பெருமை

காந்தியடிகள்

*(காந்தியடிகள் பஞ்சகனியில் தங்கியிருந்த பொழுது ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தில் நிகழ்த்திய உரை.)*

இப்பொழுது பாடப்பெற்ற பாடல், 'கடவுளே ஏழையின் நண்பர்' என்று கூறுகிறது. பழைய காலத்தில் வறுமையானது நம்முடைய நாட்டில் பெருமையடைந்து வந்தது. ஏழைகள் தங்கள் வறுமையைக் குறித்து நாணியதில்லை. பணக்காரருடைய அரண்மனையைவிடத் தம்முடைய குடிசையையே பெரிதாக மதித்தார்கள். அவர்கள் பண விஷயத்தில் தரித்திரமாய் இருந்தபோதிலும், ஆன்ம விஷயத்தில் தரித்திரர்களாக இருக்கவில்லை. திருப்தியே அவர்களுடைய பொக்கிஷமாக இருந்தது.

எல்லோரும் பணக்காரராகி மாளிகையில் வசிக்க முடியாதிருப்பதால், பணக்காரர்களுடைய மாளிகைகளை இடித்துத் தள்ளி எல்லோரையும் ஒரே மாதிரியாக வாழச் செய்து விடுவோம் என்று ஏழைகள் கூறலாம். ஆனால், அதனால் சந்தோஷமோ, சமாதானமோ தங்களுக்கும் உண்டாகாது; யாருக்கும் உண்டாகாது. கடவுளும் இவ்விதமான ஏழைகளின் நண்பர்களாகவும் துணைவராகவும் இருக்க மாட்டார். பணவித்தியாசம் என்ற பொருளில் வறுமையானது உலக முழுவதிலும் காணப்படு

கிறது. மனிதர்கள் எல்லோரும் திறமையிலும், தேவையிலும் சரியாக இல்லாததால் இந்த வித்தியாசம் இருக்கத்தான் செய்யும்.

பணத்தைக் கடவுளாக வணங்கும் குபேர நாடாகிய அமெரிக்காவில்கூட அநேகர் ஏழைகளாக இருக்கிருர்கள். ஷா ஆலம் என்னும் பாதுஷாவின் உறவினர்கள் சிலர் ரங்கூனில் பிச்சை யெடுப்பதைக் கண்டு, மலபாரி என்னும் கவிஞர், தம்முடைய இதயத்தைக் கவர்ந்துவிட்ட அந்த விஷயத்தைக் குறித்து அழகான பாடல் ஒன்று பாடியுள்ளார். அதன் சாரம் யாதெனில் கடவுளையே தம் நண்பராகவும் தலைவராகவும் கொண்டவரே தனவந்தர் என்பதாகும்.

தேவையை எவ்வளவுக் குறைத்துக் கொள்ள முடியுமோ, அவ்வளவு குறைத்துக் கொள்வதில் திருப்தி யடையும் ஓர் இனத்தார் இந்தியாவில் இருந்தார்கள். அத்தகையோர் தங்கள் முந்தானையில் கொஞ்சம் மாவும், உப்பும், மிளகாயும் முடிந்து வைத்துக் கொண்டிருப்பார்கள். ஒரு பாத்திரமும், தண்ணீர் இறைக்க ஒரு கயிறும் வைத்திருப்பார்கள். தினந்தோறும் கால் நடையாகப் பத்துப் பன்னிரண்டு மைல் தூரம் நடப்பார்கள். மாவைத் துணியிலேயே பிசைந்து எடுத்துக் கொண்டு, சுள்ளிகளைச் சேர்த்து நெருப்பு உண்டாக்கி அதில் ரொட்டியைச் சுடுவார்கள். அந்த ரொட்டியை ருசி பார்த்திருக்கிறேன். வெகு ருசியாக இருந்தது. ருசிக்குக் காரணம் ரொட்டியன்று; நல்ல வேலை செய்து களைப்புற்றதும், மனத்தில் திருப்தி யுண்டானதுமே யாகும்.

அத்தகையோர்க்கு நண்பரும் தோழரும் கடவுளே யாவார். அவர்கள் சக்கரவர்த்திகளைவிட அதிகப் பண முடையவராகத் தம்மைக் கருதிக் கொள்வார்கள். பிறர்

பணத்தை விரும்புகிறவர்களுக்குக் கடவுள் நண்பராக இருக்கமாட்டார். எல்லோரும் இந்த மாதிரி நடந்து இணையற்ற இன்பம் அனுபவிக்கவும், அதைப் பிறர்க்கு அளிக்கவும் செய்யலாம். ஆனால் பணத்தின்மேல் ஆசை வைத்தால் பிறரைக் கெடுத்துத்தான் அந்த ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும். அப்படிச் செய்தாலும் கூட, எல்லோரும் கோடீஸ்வரர்களாகிவிட முடியாது.

உண்மையான இன்பம், திருப்தியாலும், கடவுளை நண்பராகக் கொள்வதாலுமே கிடைக்கும்.

---

இந்தியாவில் உள்ள வெளிநாட்டினர்

1958-ஆம் ஆண்டின் இறுதியில் இந்தியாவில் இருந்த வெளிநாட்டினரின் எண்ணிக்கை 52 ஆயிரம். அவர்களில்,

| | | |
|---|---|---|
| ஆப்கானியர் | ... | 6793 |
| அமெரிக்கர் | ... | 3675 |
| பர்மியர் | ... | 1942 |
| சீனர் | ... | 11164 |
| ஜெர்மானியர் | ... | 3171 |
| இரானியர் | ... | 4328 |
| இத்தாலியர் | ... | 1136 |
| ருஷ்யர் | ... | 1694 |

# உபசாரப் பத்திரங்கள்

**காந்தியடிகள்**

"மந்திரிகள் யாரேனும் எந்த ஊருக்சேனும் சென்ருல், அங்குள்ள ஸ்தல ஸ்தாபனங்கள். அவர்களுக்கு விலையுயர்ந்த உபசாரப் பத்திரங்களை வாசித்து மரியாதை செய்கின்றன. இப்படிக் கொடுக்கப்பெறும் பொருள்களை மந்திரிகளே சொந்தத்துக்கு வைத்துக் கொள்கிருர்கள். இந்த வழக்கம் நல்லதன்று. உபசாரப் பத்திரம் பெறும் வழக்கத்தை நிறுத்திவிட வேண்டும். அல்லது வழங்கப் பெறும் பொருள்களை உள்ளூர் காங்கிரஸ் கமிட்டியிடம் கொடுத்துவிட வேண்டும். அது போலவே, மந்திரிகளும், காங்கிரஸ் தலைவர்களுக்கும் பூமாலை அணியும் விஷயமாகவும் ஒரு நல்ல முறையை ஏற்படுத்த வேண்டும். மந்திரிகளுக்கு, முந்நூறு, நானூறு ரூபாய் பெறுமான மாலைகள் போடுவதை நான் பார்த்திருக்கிறேன். இதெல்லாம் பணத்தைப் பாழாக்குவதல்லவா?'' என்று ஓர் அன்பர் எழுதியுள்ளார்.

இந்த அன்பர் கூறுவது முற்றிலும் சரியே. எந்தப் பொது நல ஊழியரும், விலையுயர்ந்த உபசாரப் பொருள்களையோ அல்லது பூமாலையையோ தங்களுடைய சொந்த உபயோகத்துக்காக ஏற்றுக் கொள்ளலாகாது. இந்த வழக்கங்கள் பெருந் தொல்லையாகி விட்டன. ஆபாசமாக ஆகிவிட்டதாகக் கூடச் சொல்லலாம்.

விலையுயர்ந்த பொருள்களையும் பூக்களையும் செய்தால் தொழிலாளர்களுக்குப் பணம் கிடைப்பதாக விவாதிப்பார் சிலர். தொழிலாளர்கள் மந்திரிகளுடைய உதவி யில்லாமலேயே பிழைத்துக் கொள்வார்கள்.

மந்திரிகள் வெறும் உல்லாசப் பிரயாணம் செய்வதில்லை. மக்களுடைய குறைகளை அறிந்து கொள்வதற்காகவே சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள். அவர்கள் நல்லவர்களாய் இருந்தால் அதுவே அவர்களுக்கேற்ற பரிசாகும். அப்படியிருக்க, உபசாரப்பத்திரங்களை எழுதி அவர்களுடைய குணங்களைப் புகழ்வானேன்? அதற்குப் பதிலாக உபசாரப் பத்திரங்கள், ஏதேனும் குறைகளும் கஷ்டங்களும் இருந்தால், அவற்றை மட்டுமே கூறுவனவாக இருக்கவேண்டும். இந்தக் காலத்தில் மந்திரிகளும் அவர்களுடைய காரியதரிசிகளும் செய்யவேண்டிய கஷ்டமான வேலை அதிகமாயிருக்கிறது. அந்நிலையில் புகழ்மொழிகள் உரைப்பது, உதவி செய்வதற்குப் பதிலாக இடையூறு செய்வதாகவே இருக்கும்.

### இந்தியாவில் டாக்டர்கள்

இந்தியாவில் 2500 பேருக்கு ஒரு வைத்தியர் வீதமும், 5000 பேருக்கு ஒரு டாக்டர் வீதமும் இருக்கிறார்கள்.

# சுவாமி விவேகாநந்தரின் கடிதம்

டார்ஜீலிங்,
ஏப்ரல், 20, 1897

அன்பார்ந்த சசி,

நீங்கள் அனைவரும் இதற்குள் சந்தேக மின்றிச் சென்னை போய்ச் சேர்ந்திருப்பீர்கள். பிலகிரி என்பவர் உன்னை நிச்சயமாக நன்கு பாதுகாத்து வருகிறார் என்றும், சதாநந்தா உனக்குப் பணிவிடை செய்து வருகின்றான் என்றும் நினைக்கிறேன். சென்னையில் ஒரு சிறிதும் இரஜசமின்றி முற்றிலும் சாத்வீக முறையில் பூஜை நடைபெற வேண்டும். அளசிங்கர் இதற்குள் சென்னை திரும்பியிருக்கலாம். எவரோடும் சச்சரவு செய்யாதே—எப்போதும் சாந்த நிலையில் இரு. தற்சமயம் ஸ்ரீ இராமகிருஷ்ணரை மட்டும் பிலகிரியின் இல்லத்தில் பிரதிஷ்டை செய்து பூஜையை நடத்தி வருக. பூஜை வெகு விரிவாகவும் நீண்ட நேரம் பிடிப்பதாயும் இருக்காமற் பார்த்துக் கொள்க. இவ்வாறு மிச்சம் பிடிக்கும் பொழுதை வகுப்புக்கள் நடத்துவதற்கும் சிறிது பிரசார வேலை செய்வதற்கும் பயன் படுத்தல் வேண்டும். உன்னால் இயன்றவரை பலருக்கும் தீட்சையளித்தல் நன்றே. இரண்டு பத்திரிகைகளின் வேலையையும் பார்த்துக் கொள்க. உன்னால் கூடிய மட்டும் அதற்கு உதவி செய்க. பிலகிரி என்பவர்க்கு இரு விதவைப் பெண்கள் உளர். அவர்களுக்கு நீ அன்போடு கல்வியூட்டுக. அவர்கள் மூலம் அம்மாதிரியான இன்னும் பல விதவைப் பெண்கள் தமது

மதத்தில் இருந்து கொண்டே ஒரு சிறிது ஆங்கிலமும் சமஸ்கிருதமும் கற்பதற்கான முயற்சிகளைத் தனியாகச் செய்க; ஆனால் இவ்வேலை முழுதும் தூரத்திலிருந்தே செய்தாகவேண்டும். இளம் மங்கையர் முன்பு வெகு ஜாக்கிரதையாக இருத்தல் வேண்டும். ஒரு முறை தவறி வீழின், தப்பிக்கும் வழி இல்லை; அப்பாவம் மன்னித்தற்கரிய தாகும்.

அதிகாலையில் உனது நித்தியப் பூஜையையும் இதர கடமைகளையும் சுருக்கமாக முடித்து விட்டு பிலிகிரி என்பவரையும் அவரது குடும்பத்தாரையும் ஒன்ருகக் கூட்டி கீதை முதலியன நூலை தூய சாஸ்திரங்களை அவர்கட்கு முன்பு வாசிக்கவும். இராதை கிருஷ்ணன் இருவருக்குமுள்ள தெய்வீக அன்பைப் பற்றிப் போதிப்பதற்குச் சிறிதும் அவசியம் இல்லை. சீதா-ராமரிடத்தும் ஹரபார்வதியிடத்தும் உண்மையான பக்தி செய்தலைப் போதி. இவ்விஷயத்தில் தவறுதல் நேராதவாறு பார்த்துகொள்.

இராதைக்கும் கிருஷ்ணனுக்கும் இடையே மிகுந்த தெய்வீக உறவினைப் பற்றிய கதைகள் இளைஞரின் மனங்கட்குச் சற்றும் பொருத்தமற்றனவாம். இதற்கொரு காரணம் யாதெனில் பிலிகிரியும் மற்றும் இராமாநுஜ மதத்தினரும் ராமரை வணங்குபவராவார்; ஆதலால் அவர்கட்கு இயல்பாய் உள்ள பக்தி நிலை ஒருக்காலும் குலையாதவாறு கவனித்துக் கொள்.

மாலை வேளைகளில் பொது மக்களுக்கு அம்மாதிரியான சிவஞான போதங்களை அளிப்பாயாக; இவ்வாறு செய்யின் வரவர மலையையும் தாண்டி விடலாகும்.

பூரணமாக தூய்மை எப்போதும் சூழ்ந்திருக்கும் படிக்கும் வாமாசாரம் இம்மிகூட உள்ளே புகாதபடிக்கும்

பார்த்துக்கொள். மற்றவைகட்குப் பகவானே உனக்குத் துணையாவார்; அச்சம் வேண்டாம். பிலிகிரிக்கு மரியாதை யார்ந்த என் நமஸ்காரங்களைச் சொல்லுக. அவர் போன்ற எனது அடியார்கட்கும் அன்பைச் செலுத்துக.

எனது பிரியத்தையும் அன்பையும் ஆசிகளையும் ஏற்பாயாக.

உனது பிரியமான
விவேகாநந்தா.

சிறப்பாக எனது அன்பையும் ஆசீர்வாதத்தையும் நமஸ்காரத்தையும் டாக்டர் நஞ்சுண்ட ராவ் என்பார்க்கும் செலுத்துக. அவர்க்கு உன்னால் இயன்றமட்டும் உதவி புரிக. தமிழர்களுக்குள்ளே சமஸ்கிருதக் கல்வியை முக்கியமாகப் பரப்புவதற்காக உன்னால் கூடிய மட்டும் முயலுக.

---

சசி—சுவாமி இராமகிருஷ்ணாநந்தா.

பிலிகிரி—பிலிகிரி ஐயங்கார், சென்னையில் ஒரு சட்டவாதி. சுவாமி விவேகானந்தரைப் பெரிதும் புகழ்ந்தவர்களில் ஒருவர். இவரது காசில் கெர்னன் என்னும் பெயர் கொண்ட 'ஐஸ் ஹவுஸ்' கட்டிடம் தான் சென்னைக்கு சுவாமி விஜயம் செய்த காலத்தில் அவர் தங்கியிருந்தாராகையால் புனிதம் பெற்றது. சுவாமி இராமகிருஷ்ணாநந்தர் சுமார் பத்தாண்டு காலம் இங்கே தங்கியிருந்து இராமகிருஷ்ண இயக்கத்தை நிறுவியும் நடத்தியும் வந்தார்.

அளசிங்கப் பெருமாள் எனபவர் சுவாமி விவேகாநந்தரிடத்தும் பெரிதும் ஈடுபட்ட ஒரு சீடர் சென்னையைச் சார்ந்த இளைஞரான சீடர் கூட்டத்தைச் சார்ந்தவர். அமெரிக்கப் பிரயாணத்திற்குப் பணம் சேர்த்துக் கொடுத்து உதவியவர்.

டாக்டர் நஞ்சுண்ட ராவ்—சென்னையிலிருந்த ஒரு பிரபலமான மருத்துவர்—சுவாமி விவேகானந்தரிடத்து ஆர்வங்கொண்ட ஒரு சீடர்.

# நல்லுரை

[காஞ்சி காமகோடி பீடாதிபதிஸ்ரீ ஆசார்யா ஸ்வாமிகள் சென்னையில் நிகழ்த்திய உரையிலிருந்து தொகுத்தது.]

உலகத்தில் எவ்வளவு பிடிவாதக் காரர்களாய் இருந்தாலும், வியாதியின் தொந்தரவு தாங்க முடியாதபோது, தங்கள் பிடிவாதத்தைக் கொஞ்சம் மாற்றிக் கொள்வது வழக்கம்.

*　　*　　*

நாம் எப்பொழுதும் சாகாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணம் எறும்பு முதல் எல்லாப் பிராணிகளுக்கும் இருக்கிறது. ஆனல் ஒவ்வொரு பிராணியும் செத்துச் செத்துப் பிறந்துகொண்டேயிருக்கிறது. மரணத்தை வென்ற பெரியோர்கள் இருந்தார்கள் என்று இதிகாசங்கள் கூறுகின்றன. சமீபகாலத்தில் அப்படிப் பட்ட சதாசிவ பிரமேந்திராள் என்ற பெரியவர் ஒருவர் இருந்ததாகவும் தெரிகிறது. இப்பொழுதும் சில மகான்கள் இருப்பார்கள். ஆனலும் மரணம் என்னும் வியாதியை நிவர்த்திக்க மருந்து எது என்பதை நம்மிடம் வந்து அவர்கள் சொல்லுகிறதில்லை. இந்த உயர்ந்த மருந்தையே ஆதி சங்கரர் நமக்கு உபதேசித்திருக்கிறார். உயிரோடிருக்கும் பொழுதே இதை நாம் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். செத்த பிறகு செய்து கொள்வதற்குப் போதுமான சக்தி நமக்குக் கிடையாது. முந்திச் செத்துப் போனவர்கள் மறுபடியும் பிறந்திருக்கிறோ

மல்லவா ? அதனுலேயே இது விளங்குகிறது. அது போலவே பிழைத்திராதவன் சாக முடியாது. செத்திருப் பதால் முந்தி நாம் பிறந்திருக்க வேண்டும். இதுபோல இன்னும்விசாரிக்கப்போனுல் தலைசுற்றஆரம்பித்துவிடும்.

* * *

மனிதனுக்கு உடம்பு என்று யாரோ, எப்பொழுதோ ஏற்படுத்திவிட்டார். அது உள்ள வரையில் பசி, தாகம் என்பவை மனிதனைப் பாதித்துக்கொண்டே இருக்கின் றன. அவற்றைத் தீர்த்துக் கொள்வதற்காக ஒவ்வொரு வரும் அநேக பொருள்களைத்தேடவேண்டி நேரிடுகிறது. நம்முடைய காரியங்களுக்கு உபயோகமாய் இருப்பதால் அவற்றில் நமக்கு ஆசை உண்டாகிறது. அதற்கு இடையூருயிருந்தால் வெறுப்பு உண்டாகிறது. பசி, தாகம் என்னும் வியாதிகளைத் தீர்த்துக் கொள்வதற்காக நாம் எல்லோரும் இவ்வளவு கஷ்டப்படுகிருேம். வேறு வியாதிகளாயிருந்தால், மருந்தை உபயோகித்தால் நீங்கி விடும். இந்த வியாதியோ அப்படி நீங்குவதில்லை. வேளைக்கு வேளை உண்டாகித் தொந்தரவு செய்து கொண்டே இருக்கிறது. பசி இல்லாமல் இருப்பதற்கு யாராவது ஒரு சித்தர் மருந்து கொடுத்தால் இப்படிக் கஷ்டப்பட வேண்டியதில்லை.

* * *

மனிதன் எப்பொழுதும் மேற்போவதற்குரிய காரியங் களைச் செய்ய வேண்டும். பிராணிகளுள் மனிதனைத் தவிர மற்றவையெல்லாம் குறுக்கே வளர்ந்தவை. அவற் றைத் திர்யக் பிராணிகள் என்பார்கள். மனிதன்தான் நேரே வளர்பவன். அவனுடைய உருவம் அவன் உயர்ந் தவன் என்பதைக் காட்டுகிறது. அவன் தர்ம வழியில் நடந்தால் பிராணிகள்கூட அவனை ஆதரிக்கும். அதர்ம வழியில் நடந்தால் சகோதரன்கூட விலகி விடுவான்.

பாவம் என்பது என்ன? புண்ணியம் என்பது என்ன? எதை நாம் செய்யக்கூடாதென்று மனத்திற்கு தோற்றுகிறதோ, அதுதான் பாவம்; எதைச் செய்வது நல்லது என்று தோன்றுகிறதோ, அதுதான்புண்ணியம்.

* * *

ஒரு மனிதனுக்கு ஒரு பொருள் வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அதை அடைய முயலுகிருன்; நியாயமான வழியில் கிடைக்காவிட்டால் தவருனவழியில் முயலுகிருன். அதுதான் பாவம். அந்தப் பாவத்துக்குக் காரணமாயிருப்பது வேண்டும் என்னும் ஆசை. அதைத் தான் காமம் என்று சொல்லுவார்கள். அது நமக்கு ஒரு பகைவன். மற்ரென்று இருக்கிறது; அது குரோதம்— கோபம். ஒரு பொருளின்மீது ஆசைப்பட்டால் அது கிடைக்காத பொழுது அதற்குத் தடையாக இருந்தவர் கள்மேல் கோபமுண்டாகிறது. காமம் திருப்பப்பட்ட பொழுது கோபமாகிறது; ஆகையால் இரண்டையும் ஒன்று என்றே சொல்லிவிடலாம்.

* * *

ஆசையின்றி ஒரு காரியத்தைச் செய்தால், அப் பொழுது பாவமில்லை. ஆசைப்பட்டு ஒன்றைச் செய்வது தான் பாவம்.

* * *

மதம் என்பது என்ன? பிறவி எடுத்ததன் பயனை அடையச் சொல்லிக் கொடுக்கும் ஒரு வழி.

* * *

விளக்கைக் காட்ட, வேறு விளக்குக் கொண்டு வந் தால் அதற்கு அர்த்தமில்லை.

# சித்தக் கோளாறுகள்

ராஜாஜி

பேய், பிசாசு, காற்று, கறுப்பு, என்று பலவிதப் பெயர்கள் தந்து, வேப்பிலையும் மந்திரமும் அம்மன் பூஜையும் செய்து தீர்க்கப்பார்க்கும் வியாதிகளைப் பற்றி, அனைவருக்கும் தெரியும் அல்லவா? இவை யெல்லாம் மனித தேகத்தில் வேலைசெய்துவரும் சித்தப் பொருளுக்கு ஏற்பட்ட நோய் நிலை. உடலுக்குள் கண்ணுக்குப் புலப்படாமல் வேலை செய்யும் பொருள் உண்டு. அதற்குப் பெயர் சித்தப் பொருள் என்று வைத்துப் பேசலாம்.

இந்தச் சித்தப்பொருள், உடலில் மறைந்து நின்று, மனிதனுடைய எல்லாக் காரியங்களையும் நடத்திவருகிறது. அது நமக்குத் தெரிந்தும் தெரியாமலும் உடலில் சதா, வேலை செய்து வருகிறது. உடலுறுப்புக்களிலும் தசைகளிலும் சீர்கேடுகள் உண்டாக்கி நோய்கள் தோன்றுவதைப்போல், இந்தச் சித்தப்பொருளிலும் சில சமயம் சீர்கேடு ஏற்படுகிறது. அப்போது பலவித நோய்கள் உண்டாகின்றன. அவற்றைச் சமாளிக்க, சாதாரண உடல் வைத்திய முறையில் வழி இல்லை. அந்த நோய்களின் போக்கே வேறு. வெகு வியப்பான நிகழ்ச்சிகளும் கஷ்டங்களும் நேரிடும். வியப்பான முறையில் இவை தீர்ந்து போய்க் குணப்படுவதும் காணலாம்.

சித்தப் பொருளின் சீர்கேட்டைப் பற்றியும் அதற்குச் செய்ய வேண்டிய முறையைப் பற்றியும், நிபுணர்கள்

ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். ஆனால், இன்னும் அதைப் பற்றிச் சரியான அளவில் விளக்கம் ஏற்படவில்லை.

சித்தப் பொருள் என்பதை, ஒரு நீரோட்டம்போல் வைத்துக்கொள்ளலாம். உடலின் ஆரோக்கிய நிலைக்கு, சரியான ரத்த ஓட்டம் எவ்வளவு முக்கியமோ அதைப் போல், சித்தப் பொருளின் சம ஓட்டமும் இன்றியமையாததாகும். அதில் சுழிகளும் அலைகளும் ஏற்பட்டால், சீர்கேடு உண்டாகிவிடுகிறது.

ஆசை, விருப்பங்கள் ஒரு போக்காகச் செல்லாமல் முரண்பாடுகள் உண்டானால், மனிதனுடைய உள்ளத்தில் சங்கடங்கள் ஏற்படுகின்றன. சித்தப் பொருளில் அளவுக்கு மிஞ்சிச் சங்கடங்கள் தோன்றினால், சித்தப் பொருள் சீர்கேடு அடைகிறது. ஓரளவு இத்தகைய கோளாறுகளைத் தாங்கும் சக்தி அதற்கு உண்டு. இந்த வரம்பு, ஆளுக்கு ஆள் வித்தியாசப்படும்; வயதுக்கும் நிலைமைக்கும் தகுந்தபடி வேறுபடும். ஆயினும். வரம்பு மீறிய முரண்பாடு ஏற்பட்டால், சித்தப் பொருளின் ஆரோக்கிய நிலை கெட்டுப்போய், 'பேய்' பிடித்துக் கொள்ளும்.

முதலில் இதன் சின்னங்களைக் கவனிக்கலாம். சித்தப் பொருள் சரியான முறையில் விஷயங்களைக் கிரகிப்பதும் யோசிப்பதும் குறையும்; தெளிவு மங்கும்; துயரமும் தாபமும், காரணமின்றித் தோன்றும், இவையெல்லாம் வியாதியைத் தீர்த்துக்கொள்ள, சித்தப் பொருள் செய்யும் முயற்சியே யாகும். ஆயினும், அவை நோயாளிக்குப் பெருந் தொந்தரவும் துன்பமுகாகக் காணப்படும்; செரிக்காத உணவுப் பொருளைத் தின்றால் வயிற்றிலும்,

அடிபட்டுக் கால் எலும்பு முறிந்தால் காலிலும் வலி உண்டாவது போல், பொறுக்க முடியாத வலி உண்டானால் தான், மனிதன் உள்ளே நிகழ்ந்த சீர்கேட்டைக் கவனிப்பான். வலி என்பது இல்லையானால், உடலில் ஆரோக்கியமே இராது; எல்லாம் கெட்டுக்கொண்டே போய், அழிந்துவிடும்.

உள்ளத்தில் உண்டாகும் கருத்து முரண்பாடுகள், அநேகமாகத் தாமாகவே சீர்பட்டுச் சமநிலை உண்டாகி விடும். முரண்பாட்டின் தன்மைக்கும், சங்கடப்படும் ஆளின் வயது, மனோநிலை, முதலியவைகளுக்கும் தக்க வாறு, இந்தத் திருத்தம் நடைபெறும். சிறு விசனங்களை, குழந்தைகள் வெகு சீக்கிரத்தில் மறந்து விடும். மறதியே அவைகளுக்கு வைத்தியம். மறவாத விசனங்கள், சித்தக் கோளாறுகளை உண்டாக்கும். ஓர் இராத்திரி தூங்கி விட்டால், குழந்தைகளுக்கு ஏற்பட்ட சித்தப் பொருளின் சுழிகளும் அலைகளும் அநேகமாக அடங்கிவிடும். சங்கடத் துக்குக் காரணமான பொருளை, பெற்றோர்கள் நீக்கிவிட் டாலும், சங்கடம் சீக்கிரத்தில் மறந்துபோகும்; தோஷம் ஒன்றும் மிஞ்சி நிற்காது. ஆயினும், சிறு குழந்தை களுக்கு ஏற்படும் சில சங்கடங்கள், யாருக்கும் தெரியா மல் அடக்கப்பட்டு, ஒழிந்து போகாமல் மறைந்து நின்று பிறகு வெகுநாட்கள் கழித்து, வயது வந்த பின் பலவிதச் சித்தக் கோளாறுகளாக வடிவங் கொண்டு, வெளிப் படுவது முண்டு.

குழந்தைப் பருவம் முடிந்தவர்களுக்குச் சித்தத்தில் நிகழும் முரண்பாடுகளை, எவ்வாறு அவர்கள் தீர்த்துக் கொள்கிறார்கள் என்பது, அநேகமாக அவரவருக்கே தான் தெரியும்; பிறருக்குத் தெரியமாட்டாது. சரியான முறையில் தீர்த்துக்கொண்டால், ஆரோக்கிய நிலை உண்

டாகும். தவருன முறையில் சங்கடத்தைத் தீர்த்துக் கொண்டு வெளித்தோற்றத்துக்கு மட்டும் சமாதானம் உண்டாக்கிக் கொண்டு போனல், சித்தக் கோளாறு நிச்சயம் உண்டாகும். சங்கடங்கள் நேர்ந்தால், வரம்பு கடந்த அடக்குமுறை, மதுபானம், போன்ற சாதனங்களைக் கொண்டு அவைகளைத் தீர்த்துக் கொள்ளப் பார்ப்பது தவறு.

சிலர் தங்களுக்கு ஏற்பட்ட சங்கடத்தைத் தாங்க மாட்டாமல், பந்துக்களுடனும் சிநேகிதர்களுடனும் சேர்ந்து கலப்பதை விட்டுவிட்டு, வாழ்க்கையிலேயே வெறுப்புக் கொண்டு விடுகிருர்கள். ஒரு பெண்ணுக்கு ஏதேனும் அங்கவீனம் அல்லது உடல் கோளாறு இருந்தால், அதனுல் அவள் யாருடனும் சேராமல் தனியாகவே இருக்க விரும்புவது இந்த வகையைச் சேர்ந்தது. எல்லாரும் நல்ல உடைகளும் ஆபரணங்களும் போட்டுக்கொண்டிருக்க, தனக்கு இவை இல்லையே என்று ஏங்கி, மற்றவர்களோடு சேராமல், எல்லோர் பேரிலும் சில குழந்தைகள் வெறுப்புக் கொள்வது உண்டு. தைரியம் தந்து கொண்டு, உண்மையைச் சரியாகக் கண்டு, சங்கடத்தைச் சமாளித்துக் கொண்டால் தான் நன்மையே அல்லாமல், இம்மாதிரி சமூக வாழ்க்கையை விட்டுத் தனிப்பட்டு ஒதுங்குவது தவறு. கோளாறு உண்டாவதற்கான காரணந்தான் அதனுல் பலப்படும்.

சமூகத்திலே இருந்தவண்ணம் தன் சங்கடத்தை அடக்கி அடக்கி, வெளியில் காட்டாமல் மறைத்து வைத்துக் கொண்டு, கஷ்டத்தைத் தீர்த்துக்கொள்ளாமல், உள்ளே குடைந்து சித்தப்பொருளை நோய்படச் செய்வதும், கோளாறில்தான் முடியும். ஒருவனை விவாகம் செய்துகொள்ள வேண்டும் என்று ஒரு பெண்ணுக்கு

ஆசை. சில காரணங்களினுல் அது மற்றவர்களுக்குச் சம்மதமா யிராது என்று பயந்து, அந்த ஆசையை நீக்கிக் கொள்ளாமல், உள்ளே மூடி அடக்கிவைப்பது இந்த வகையில் சேர்ந்தது.

ஒரு பொருள் வேண்டும் என்று ஆசை. ஆனல், அது தன் பெற்ருேருக்கோ இனத்தாருக்கோ சம்மதமா யிராது என்று அடக்கிவிட்டு, சமாதான மின்றி, பேசாமல் இருப்பது. ஆயினும், அந்த விருப்பம் கொடிய தீவிரத்துடன் உள்ளே வேலை செய்து கொண்டே இருக்கும். இதுவும் இந்த அடக்குமுறை வகையில் சேரும்.

மற்றப் பெண்கள் காலேஜ் சென்று இங்கிலீஷ் படிக்கும்போது, தான் மட்டும் வைதீக முறையில் கட்டாயமாக அழுத்தப்பட்டுக் கிடப்பதா என்று சங்கடப்படுவது; ஆயினும், அதைப்பற்றிப் பேசாமல் இருப்பது - இதுவும் ஓர் உதாரணமாகும்.

பள்ளிக்கூடத்தில் சரியாகப் 'பாஸ்' ஆகிறதில்லை. தேருத பிள்ளைகளில் சிலர் தீவிர உணர்ச்சி படைத்தவர்களா யிருப்ப துண்டு. இத்தகைய பிள்ளைகள், உள்ளத்தில் யாருக்கும் தெரியாமல் நிரம்பச் சங்கடப்படுவார்கள். வெட்கப்பட்டு அடக்கி அடக்கி, பள்ளிக்கூடத்தை விட்டு விட்டு ஓடிப்போய், தான்தோன்றியாகக் கெட்டுப் போவதும் உண்டு. தொழிலில் சாமர்த்தியம் போதாது என்று பலர் சொல்லுவதைப் பொறுக்க முடியாமல், சிலர் எங்கேயாவது ஓடிப்போய் மறைந்து அலேவது உண்டு. குடும்ப வாழ்க்கையை நடத்த முடியாமல், மனைவியை விட்டு விட்டுச் சிலர் தனியாக வாழப்போவதுண்டு.

இவை யெல்லாம், சங்கடங்களைச் சமாளிக்கப் போதிய தைரியம் இல்லாததனுல் உண்டாகும் நிகழ்ச்சிகள்.

இதற்குப்பதிலாக, சில சமயம் சித்தப் பொருள் உள்ளே சீர்கேடு அடைந்துவிடுவதும் உண்டு. அதாவது ஆள் ஓடி மறைவதற்குப் பதிலாக, சித்தப் பொருள் ஓடி மறைய ஆரம்பிக்கிறது! யுத்தத்தில் சேர்ந்த பலருக்கு, தாங்க முடியாத திகில் பிடித்துக் கொள்ளுகிறது. அந்தச் சமயத்தில் தைரியம் சம்பாதித்துக் கொண்டு சமாளிப் பதற்குப் பதிலாக சிலர் சித்தப் பிரமையை அடைகிறார்கள். உடல் சிறைப்பட்டாலும், சித்தத்தைச் சிறைப் படுத்த முடியாது. அது தன் பாட்டுக்குக் கோளாறுகளைத் தேடிக் கொள்ளும்.

சங்கடங்கள் ஏற்பட்டால், சிலர் அதை மறக்க வேறு காரியங்களில் ஈடுபட்டு உடலை வருத்தி வரம்பு கடந்த சிரமத்தில் மூழ்குவார்கள்; எல்லாவிதக் காரியங்களிலும் இயக்கங்களிலும் தீவிரப்பரபரப்புடன் கலந்து கொண்டு, தம்மையும் மறக்கப் பார்ப்பார்கள். சிலருடைய பொதுத் தொண்டுகளுக்கு இது காரணமாகும்.

இவையெல்லாம் போக, சர்வ சாதாரணமாக நிலவும் ஒரு தவறான முறை உண்டு. சங்கடங்களைத் தீர்த்துக் கொள்ள மதுபானம், அபினி, கஞ்சா முதலிய போதைப் பொருள்களைக் கொண்டு அறிவீனர்கள் தங்கள் கஷ்டங் களைத் தீர்த்துக்கொள்ளப் பார்ப்பார்கள். முடிவில் அந்தச் சாதனங்களுக்கே தாங்கள் இரையாவார்கள். முதலில் சந்தோஷம் உண்டாகிறது; சங்கடங்கள் தீர்ந்து சமநிலை உண்டாவதுபோல் தோன்றுகிறது. பிறகு, குடிப் பழக் கத்துக்கே அடிமையாகி, இருந்த சங்கடங்கள் குறைவதற்குப்பதிலாக, இன்னும் அதிகமாக அவை பெருகும்.

தான் படைத்த அறிவைக் கொண்டு சங்கடங்களைத் தீர்த்துக்கொள்வதே சரியான முறை. என்ன காரணங் களினால் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது; எந்தத் தடைகளி

ஞல் விருப்பம் நிறைவேருமல் இருக்கிறது; விரும்பும் பொருளின் தன்மை என்ன என்பவை போன்ற விஷயங்களைக் கலவரம், மோகம், பரபரப்பு ஆகியவை இன்றிச் சரியாக யோசித்து, தான் செய்ய வேண்டியது என்ன என்று ஒரு முடிவு பண்ணி, அதைச் செய்வதே சரியான முறை. தைரியமும் அறிவும் கொண்டு சங்கடங்களைச் சமாளிக்க வேண்டுமே யொழிய, அவைகளைக் கண்டு பயந்து ஓடக்கூடாது; ஒளித்து மறைக்கக் கூடாது; அல்லது மறக்க மதுபானம் அருந்தி வழக்கப்படுத்திக் கொள்ளவும் கூடாது. தவறு நடந்தால் அதை ஒப்புக் கொள்வதும், பிழையைக் கூடிய அளவில் திருந்தும் முயற்சி யெடுப்பதுமே, நேரானவழி. அதற்குப் பதிலாக பிறர்மேல் பழி சொல்லுவதும் தன் பிழையை மறைக்கப் பார்ப்பதும் அதிகமான சங்கடங்களுக்கே இடமாகும். முக்கியமாக, எந்தச் சங்கடத்துக்கும் மதியும் தைரியமுமே சஞ்சீவியைப் போன்ற மருந்து. வேறு குறுக்கு வழி யில்லை; மூடி வைத்துப் பயனில்லை. குழந்தைகள், பெண்கள், வயது வந்தவர்கள், பெரியோர்கள், சிறியோர்கள் ஆகிய அனைவருக்கும், சங்கடங்களைத் தீர்க்கும் மருந்து, மதியும் தைரியமுமே ஆகும்.

பெண்களுக்கு ஆண்களைவிட நரம்பின் இழை மிகவும் சன்னம். இதனுல் அவர்களுடைய உணர்ச்சிகளின் நயமும் அதிகம்; அபாயமும் அதிகம். வாத்தியக் கருவியில் உள்ள பஞ்சமத்தின் கம்பியைப்போல், சுருதியும் மேலேதான் இருக்கும். சுலபமாக அறுபட்டும் போகும். இதனுல் தான், சித்தக் கோளாறுகள், பெண்களுக்கு அதிகம். ஆனல், அனைவருமே இந்த வியாதியை அடையக்கூடும். வியாதியின் தன்மை பொதுவானதே யாகும்.

# பிரிட்டனில் போலீஸ் படை

பிரிட்டிஷ் போலீஸ் படை ஒழுக்கத்திலும் கட்டுக்கோப்பிலும் குற்ற ஆய்விலும் சிறந்தது; உலகப் புகழ் பெற்றது. இதன் வரலாற்றை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

ஆங்கிலோ - ஸாக்ஸன் வரலாற்றுக் காலத்தில், நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும், அமைதியைக் காக்கவும் குற்றமிழைப்போரைத் தண்டிக்கவும் அரசுக்குத் துணை நிற்பதாகப் பிரமாணம் எடுப்பது வழக்கமாக இருந்தது. இது வரலாற்றின் முதற் பகுதியாகும்.

பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையில், நீதி நெறியை நிலைநாட்டும் பொறுப்பை அமைதிக் காவலர்கள் (ஜஸ்டிஸஸ் ஆவ் பீஸ்) ஏற்றுக் கொண்டிருந்தார்கள். இவர்களுடைய பணிக்கு, ஊதியம்பெறாது மாதாகோவிலுக்கு உழைக்கும் ஊர்க்காவலர்கள் துணை செய்து வந்தார்கள். பிற்காலத்தில் நகரங்களில் காவற்காரர்கள் நியமிக்கப் பெற்றார்கள். ஒரு சில இடங்களில் ஊதியம் பெறும் காவற்படை ஏற்பட்டது. இது போலீஸ் படை வரலாற்றின் இரண்டாம் பகுதியாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தற்போதுள்ள காவற்படை நிறுவப்பட்டது. ஒழுங்கை நிலை நாட்டுவதிலும் குற்றமாய்வதிலும் இது தனிச் சிறப்புடன் விளங்குகிறது. பிரிட்டிஷ் மக்கள், எக்காலத்திலும், அரசின்

நிர்ப்பந்தத்திற்காகச் சட்டத்திற்கு அடங்கி நடக்கவில்லை. தம்முடைய நலனுக்கும் மாற்ருன் நலனுக்கும் அவசியம் எனக் கருதி கடமையுணர்ச்சியுடன் செயலாற்றி வருகிருர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மெட்ரோபாலிடன் போலீஸ்

பத்தொன்பதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் லண்டன் நகரசபையே காவற் பணியையும் ஏற்றுக்கொண்டிருந்தது. மாவட்டங்களில் அங்கங்குள்ள மடாலயம் காவற்படையும் உள்நாட்டு அமைச்சின் நிர்வாகத்திற்கடங்கிய "பௌ ஸ்ட்ரீட்" கண்காணிப்புப் படையும், நதிக் காவலர் படையும் செயலாற்றி வந்தன.

லண்டன் நகரம் விரிவடைய விரிவடைய மக்கள் தொகையும் அதிகமாகப் பெருகிற்று. காவற்படைகளின் பொறுப்புக்களும் அதிகமாயின. பல்வேறு படைகள் இணைந்து நின்று பணியாற்றுவது அவசியமாயிற்று. நகரிலுள்ள ஒழுங்கீனங்களையும் குற்றங்களையும் ஆய்ந்து பரிகாரம் கூற 1770-ஆம் ஆண்டிலிருந்து 1828-ஆம் ஆண்டுக்குள் ஒன்றன்பின் ஒன்ருக ஆறு பாராளுமன்ற விசாரணைக் குழுக்கள் நியமிக்கப் பெற்றன. முதல் ஐந்து குழுக்களும் கருத்து வேற்றுமை காரணமாக தம் பணியில் வெற்றி பெறவில்லை. ஆருவது குழு காவற்படையாக திருத்தி அமைக்க வேண்டும் என்று கூறியதுடன் சிபாரிசுகளையும் செய்தது. இந்தக் குழுவில் அப்போது உள்நாட்டு மந்திரியாக இருந்த ஸர் ராபர்டு பீலும் அங்கம் வகித்தார். குழுவின் சிபாரிசுகளை ஏற்றுக் கொண்டதன் விளைவாக 1829-ஆம் ஆண்டில் மெட்ரோபாலிடன் போலீஸ் சட்டம் அமலுக்கு வந்தது. லண்டன் நகரம் தவிர மற்ற இடங்களிலுள்ள காவற்படைகள் அனைத்

தையும் இணைத்து மெட்ரோபாலிடன் போலீஸ் படை நிறுவப்பெற்றது.

போலீஸ் நிர்வாகத்தை உள்நாட்டு அமைச்சர் ஏற்றுக்கொண்டார். லண்டன் நகரப் போலீஸ் படை, நகர சபையில் ஓர் பிரிவாக (அன்றும் இன்றும்) இயங்கி வருகிறது.

புதிய போலீஸ் அதிகாரிகள் திறமையுடனும் நேர்மையுடனும் பணியாற்றி போலீஸ் பிரிவுக்குப் புகழ் தேடினர்கள். மெட்ரோபாலிடன் போலீஸ் படை சிறப்பாகப் பணியாற்றியதால், அதைப் பின்பற்றி நாடெங்கும் போலீஸ் படை அமைத்தனர்.

ஸ்காட்லாந்து போலீஸ் சட்டம்

ஸ்காட்லாந்திலுள்ள பெரிய நகரங்களில் பத்தொன்பதாம் நூற்ருண்டின் தொடக்கத்திலேயே, ஊதியம் பெறும் ஊர்க்காவலர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். 1833-ஆம் ஆண்டில் முதல் முதலாக ஸ்காட்டிஷ் போலீஸ் சட்டம் அமலுக்கு வந்தது. இதன்படி பெரிய நகரங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட கமிஷனர்கள் போலீஸ் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டார்கள். 1857-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட ஸ்காட்லாந்து போலீஸ் சட்டம் போலீஸ் அதிகாரிகளுக்கு விரிவான முறையில் அதிகாரங்களை வழங்கிற்று. நாடெங்கும் போலீஸ் படை நிறுவப் பெற்றது.

நிர்வாக இணைப்பு

பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் வேல்ஸிலும் இங்கிலாந்திலும் உள்ள போலீஸ் படைகளை இணைக்க இரு சட்டங்கள் இயற்றப் பெற்றன. சிற்றூர்

களிலிருந்த காவல் படைகள் மாவட்டப் படையுடன் இணைக்கப்பெற்றன. பெரிய நகரங்களில் நகராட்சியின் கீழ் போலீஸ் நிர்வாகம் இருந்தது.

முதல் உலகப் போருக்குப் பின் போலீஸ் படையின் அலுவல்கள் பெருகின. சாலைப் போக்குவரத்து அதிகரித்ததால் அதை ஒழுங்குபடுத்தும் பொறுப்பை போலீஸ் நிர்வாகம் ஏற்றுக் கொண்டது. நகரசபையில் இருந்து போலீஸ் நிர்வாகத்தை ஏற்றுக் கொள்வது பற்றி ஆராய ஆய்வுக்குழுக்கள் நியமிக்கப் பெற்றன. இரண்டாம் போருக்குப் பிறகு போலீஸ் நிர்வாகத்தை மீண்டும் பரிசீலனை செய்தார்கள். இதன் விளைவுதான் 1946-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இங்கிலாந்து - வேல்ஸ் போலீஸ் சட்டமும் ஸ்காட்லாந்து போலீஸ் சட்டமும். இவற்றால் காலத்திற்கேற்ற முறையிலும், மரபுக்கு ஊறில்லாத வகையிலும் போலீஸ் நிர்வாகம் திருத்தி அமைக்கப் பெற்றது.

ஆள் திரட்டலும் பயிற்சி முறையும்

1958-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்திலும் வேல்ஸிலுமுள்ள போலீஸ்காரர்களின் எண்ணிக்கை 70,325. ஸ்காட்லாந்திலுள்ள போலீகாரர்களின் எண்ணிக்கை 8,168. பிரிட்டிஷ் போலீஸ் படையில் சுமார் 2,300 பேர் பெண்கள்.

போலீஸ் படையில் சேர விரும்பும் வாலிபர்கள் சிறந்த ஒழுக்கமும் உடலுறுதியுமுள்ளவர்களாக இருப்பது அவசியம். 19-30 வயதுக்குட்பட்டவர்களே தேர்வுக்குத் தகுதியானவர்கள். தேர்வு பெற்றவர்கள் மூன்று நிலையில் பயிற்சி பெறுவர். முதல் இரண்டாண்டுகளில் பொதுப் பயிற்சி, அதன் பிறகு அவரவர் திறனுக்

கும் மனநிலைக்கு மேற்றபடி சிறப்புப் பயிற்சி. கடைசி நிலையில் அதிகாரப் பொறுப்புக்கான பயிற்சி.

இங்கிலாந்திலும் வேல்ஸிலும் பத்து பயிற்சி நிலையங்கள் உண்டு; இவற்றில் இரண்டு பெண்களுக்கு. தேர்வு பெற்றவர்கள் இந்த நிலையங்களில் ஏதாவது ஒன்றில் மூன்று மாதங்கள் தங்கி ஆதாரப் பயிற்சி பெறல் வேண்டும். அதன் பிறகுதான் நிர்வாகத் துறையில் பயிற்சி தொடங்கும். பயிற்சிக் காலம் முடிந்ததும் தொழிலனுபவம் பெற, ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு காவல் நிலையத்தில் சிறிது காலம் பணியாற்றவேண்டும்.

இங்கிலாந்திலுள்ள நான்கு போலீஸ் பயிற்சிப் பள்ளிக்கூடங்களில் துப்பறியும் முறையில் சிறப்புப் பயிற்சி உண்டு. இங்கிலாந்திலும் வேல்ஸிலுமுள்ள அதிகாரிகளைத் தவிர காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகளும் இந்தக் கல்லூரிகளில் பயிற்சி பெறுவதுண்டு.

ஒரு கான்ஸ்டபிளுக்கு ஐந்தாண்டுகள் பணியாற்றிய பிறகே உத்தியோக உயர்வுக்கான தகுதி கிடைக்கிறது. உத்தியோக உயர்வு பெற விரும்புவோர் அதற்கான தேர்வில் வெற்றி பெற வேண்டும். வெற்றி பெற்றவர்களில் சிறந்தவர்களைப் பொறுக்கி எடுக்க, உயர்தர அதிகாரிகளடங்கிய குழு ஒன்று உண்டு.

போலீஸ் படைக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சி தரும் முறை பிரிட்டனில் உண்டு. பதினறு வயதுள்ள மாணவன், பயிற்சிப் பிரிவில் சேரலாம். 1958-ஆம் ஆண்டில் நாட்டிலுள்ள பயிற்சி மாணவர்கள் எண்ணிக்கை 2,100. பயிற்சி மாணவர்களுக்கு போலீஸ் நிர்வாகத்துறையில் போதனையளிப்பதுடன் உடற்

பயிற்சி, தற்காப்பு முதற்சிகிச்சை, நீந்துதல், உயிர்மீட்சி ஆகிய துறைகளில் பயிற்சி தரப்படுகிறது. பயிற்சி முடிந்ததும் பொது அனுபவம் பெற மாணவர்கள், தலைமை அலுவலகத்திலோ, மாவட்ட அலுவலகங்களிலோ சிறிது காலம், எழுத்தாளர்களாகவும் வேலையாட்களாகவும் பணியாற்றுவதுண்டு.

காவற்றுறையிலுள்ள அடிப்படை அதிகாரிகள் இரு வாரங்களில் 88 மணி நேரம் உழைக்க வேண்டும். இரவு பகல் என்ற வேற்றுமையின்றி வேலை நேரம் இருக்கும். அதிக நேரம் உழைத்தோருக்கு, நேரத்திற் கேற்பபடியோ, அதே காலத்திற்கு ஓய்வு நேரமோ வழங்குவதுண்டு. பிரிட்டனிலுள்ள கான்ஸ்டபிளுக்கு தொடக்க நிலையில் ஆண்டுக்கு சுமார் ஏழாயிரம் ரூபாய் ஊதியம் கிடைக்கிறது. மெட்ரோபாலிடன் போலீஸ் படையைச் சேர்ந்த கமிஷனருக்கு, ஆண்டுக்கு சுமார் எழுபத்தையாயிரம் ரூபாய் சம்பளம். போலீஸ் படையிலுள்ள பெண்களுக்கு, ஆண்கள் ஊதியத்தில் 90 சத விகிதம்தான் கிடைக்கும்.

போலீஸ் அதிகாரிகள், மக்களுக்குத் தொண்டாற்றும் மனப்பான்மையுடன் திறமையும் நெறியையும் நிலைநிறுத்தி உழைக்கவேண்டும். ஆயுதந்தாங்கும் உரிமை பெற்றவர்களாயினும், அவர்கள் வன்முறை வழிச் செல்லாமல் பரிவுடனும் பணிவுடனும் பழகி தங்களுடைய கடமையைச் செய்யும் பயிற்சி பெற்றவர்கள். பொதுவாக போலீஸ்காரர்கள் தற்காப்புக்காகவே 'தடி' எடுத்துச் செல்கிறார்கள்.

போலீஸ்காரர்கள் தங்களை மக்களுடைய ஊழியர்கள் என்று பணியாற்றுவதைப் போல, மக்களும் போலீஸ்காரர்களுக்கு உதவுவதை கடமையாகக் கருதவேண்டும்.

கடமையாற்றும் போலீஸ் அதிகாரியைத் தடுப்பதும் உதவ மறுப்பதும் குற்றமாகக் கருதவேண்டும்.

ஒவ்வொரு போலீஸ் அதிகாரியும் தன்னிலை உணர்ந்து, அறிவுவழி நின்று, சட்டத்திற்கு அடங்கிக் கடமையாற்ற வேண்டும், அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்திய அதிகாரி மீது வழக்குத் தொடர மக்களுக்கு உரிமையுண்டு. அரசுக்காகவோ மேலதிகாரிகளுடைய ஆணைக்காகவோ, சட்டத்திற்குப் புறம்பாக நடந்துகொண்டதாகக் கூறி தம்முடைய பொறுப்பை தட்டிக்கழித்துவிட ஒருபோலீஸ் அதிகாரியால் முடியாது,

போலீஸ் அதிகாரியும் மற்றவர்களைப் போல நாட்டின் பிரஜைதான். மக்களைப் போல போலீஸ் அதிகாரிக்கும் அடிப்படை உரிமைகள் உண்டு. ஆனல் கடமை காரணமாக அவர் ஒரு வரம்புக்குள் நின்று செயலாற்ற நேரிடுகிறது. உதாரணமாக ஒரு போலீஸ் அதிகாரிக்கு வாக்குரிமையுண்டு. தான் விரும்பும் ஒருவருக்கு தன்னுடைய வாக்கை அளித்து ஆதரிக்கலாம். ஆனல் அரசியலில் பங்கெடுத்துக்கொள்ள முடியாது.

போலீஸ் அதிகாரிக்குச் சில கட்டுப்பாடுகள் உண்டு. அவர் மேலதிகாரிகளுடைய ஒப்புதல் பெற்ற இடத்தில் தான் வசிக்க வேண்டும்; குடும்பத்தில் சேராத வேற்று மனிதர்கள் தம்முடைய வீட்டில் தங்குவதற்கு மேலதிகாரிகளுடைய அனுமதியைக் கோரவேண்டும். உத்தியோக அலுவல் தவிர ஊதியம் கிடைக்கக் கூடிய வேறு எந்தப் பணியிலும் பங்கெடுத்துக் கொள்ளக்கூடாது. அவரோ அவருடைய குடும்பத்தினரோ மதுவகைகளைப் பெறும் அனுமதி பெறமுடியாது. தாம் வசிக்கும் மாவட்டத்தில் எங்காவது ஓரிடத்தில் மனைவியின் பெயரால் ஓர்

கடையை நிறுவவேண்டு மென்றாலும்கூட அதற்கு மேலதிகாரியின் அனுமதியைப் பெறவேண்டும்.

நெறி தவறிய போலீஸ்காரர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பெறும். தலைமை அதிகாரி விசாரணை நடத்தித் தண்டனையை வழங்குவார். பதவி நீக்கம், அலுவலிலிருந்து விலகுமாறு ஆணையிடல் பதவி இறக்கம், அபராதம், கண்டனம், எச்சரிக்கை எனப் பலவகைகளில் தண்டனை உண்டு.

தண்டனைபெற்ற ஓர் போலீஸ் அதிகாரிக்கு நியாயம் கோரி மனுச் செய்துகொள்ள உரிமையுண்டு. இங்கிலாந்திலும் வேல்ஸிலுமுள்ள அதிகாரிகள் உள்நாட்டு அமைச்சரிடம் முறையிட்டுக் கொள்ளலாம். உள்நாட்டு அமைச்சர் ஓர் நடுவர் குழுவை நியமித்து முறையீட்டைப் பரிசீலனைச் செய்யச் சொல்லுவார். ஸ்காட்லாந்திலுள்ள அதிகாரிகள் ஸ்காட்லாந்து ஆட்சி மந்திரியிடம் முறையிட்டுக்கொள்ளலாம்.

போலீஸ் நிர்வாக முறை

பிரிட்டனில் மாவட்டப்படை, நகரப்படை, லண்டன் நகரப்படை மெட்ரோபாலிடன் போலீஸ்படை என 126 படைப்பிரிவுகள் உண்டு. ஒவ்வொரு படையும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் செயலாற்றுகிறது. போலீஸ் மாவட்டங்கள், மக்கள் தொகைக் கேற்றபடி பெரிதும் சிறிதுமாக அமைந்துள. இங்கிலாந்திலும், வேல்ஸிலும் 'சீப் கான்ஸ்டபிள்' என்ற அதிகாரி மாவட்ட நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு மாவட்டமும் பல கோட்டங்கள் கொண்டது. சில மாவட்டங்களில் இருபது கோட்டங்கள் உண்டு. இரண்டு அல்லது மூன்று கோட்டங்களுள்ள மாவட்டங்களும்

உண்டு. மக்கள் தொகை குறைவாக உள்ள கோட்டங்களில் ஐம்பது பேர்களுள்ள போலீஸ் படை இருக்கும். தொழிற்சாலைகளுள்ள கோட்டங்களில் 150 பேர்களுள்ள போலீஸ்படை இருப்பதுண்டு. கோட்டப்படை, 'ஸுபரின்டெண்ட்' என்ற அதிகாரியின் தலைமையில் செயலாற்றுகிறது.

1946-ஆம் ஆண்டில் இங்கிலாந்து - வேல்ஸ் போலீஸ் சட்டம் திருத்தியமைக்கப்பெற்றது. அதன்படி 75,000 பேர்களுக்கு அதிகமாக வாழும் பேட்டைகளுக்கு மட்டுமே தனி போலீஸ் படையை வைத்துக்கொள்ளும் உரிமையுண்டு. மற்றப் பேட்டைகளும் சிற்றூர்களும் மாவட்டப் போலீஸ் அல்லது மெட்ரோபாலிடன் போலீஸ் நிர்வாக எல்லைக்குள் உட்படுத்தப் பெற்றன.

நகரம் அல்லது பேட்டைப் போலீஸ்படை ஊர் காப்புக் குழுவின் ஆணைக்கு அடங்கிச் செயலாற்றுகிறது. ஊர் காப்புக் குழு உறுப்பினரை நகர சபையிலிருந்து தேர்ந்தெடுப்பார்கள். நகர சபைத் தலைவரே பதவியின் காரணமாக ஊர் காப்புக் குழுவின் தலைவராகவும் செயலாற்றுவார். சாதாரணமாக ஊர்காப்புக் குழு, ஓராண்டு காலத்திற்குப் பணியாற்றும். ஊர்காப்புக் குழு உள் நாட்டு அமைச்சரின் அனுமதியுடன் காவற்படைத் தலைவரையும் (சீப் கான்ஸ்டபிள்) மற்ற அதிகாரிகளையும் நியமிக்கும்.

### மெட்ரோபாலிடன் போலீஸ் படை

லண்டன் நகர்ப்பகுதி நீங்கலாக சாரிங் கிராஸை மையமாகக்கொண்டு பதினைந்து மைல்கள் விட்டமுள்ள நிலப்பரப்பு மெட்ரோபாலிடன் போலீஸ் மாவட்டமாகும். உள் நாட்டு அமைச்சர்தான், அந்தப் போலீஸ் மாவட்டத்தின் நிர்வாகத் தலைவர். மெட்ரோபாலிடன் போலீஸ்

மாவட்டத்தில் நான்கு கோட்டங்கள் உண்டு. நியூ ஸ்காட்லாந்து யார்டில்தான் மெட்ரோபாலிடன் போலீஸ் படையின் தலைமை அலுவலகம் இருக்கிறது. 1820-ஆம் ஆண்டில் மெட்ரோபாலிடன் போலீஸ் படை நிறுவப்பெற்ற போது, அத்துடன் லண்டன் நகரக் காவற்படையை இணைக்க முயன்றார்கள். ஆனால் நகர நீதி மன்றம் அதை எதிர்த்தது. மெட்ரோபாலிடன் போலீஸ் படையைப்போல, லண்டன் காவற்படையையும் திருத்தியமைக்கவேண்டும் என்ற நிபந்தனையில், அதற்கு தனித்தியங்கும் உரிமை வழங்கப்பெற்றது.

நகரின் மையத்தில் சுமார் ஒரு சதுர மைல் பரப்புள்ள பகுதியே லண்டன் போலீஸ் படையின் ஆதிக்கத்திலிருக்கிறது. லண்டன் போலீஸார், மெட்ரோபாலிடன் போலீஸாருடன் கூட்டுறவாகச் செயலாற்றி வருகிறார்கள்.

துப்பறியும் பிரிவு

பிரிட்டனிலுள்ள ஒவ்வொரு போலீஸ் படையிலும் துப்பறியும் பிரிவு உண்டு. குற்ற ஆய்வுப்பணியுடன் குற்றவாளிகளைப் பற்றியும் நெறி கெட்டவர்களைப் பற்றியும் தகவல் சேகரிப்பது, அவர்களுடைய புகைப் படங்களையும் கைரேகைகளையும் சேகரிப்பது, குற்ற ஆய்வு அறிக்கைகளைத் தொகுப்பது என பல பணிகளை இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் செய்து வருகிறார்கள்.

கொலை, வர்த்தக மோசடி, கொள்ளை முதலியவை பற்றி ஆராய மாவட்டப் போலீஸார், மெட்ரோபாலிடன் போலீஸ் துப்பறியும் பிரிவைச் சேர்ந்த (இதை ஸ்காட்லாந்து யார்டு என்று குறிப்பிடுவது வழக்கம்) அதிகாரிகளின் உதவியை நாடுவதுண்டு, துப்பறியும் பிரிவுக்கு

வைத்திய—விஞ்ஞான ரீதியில் ஆராய்ச்சி உதவிகளைச் செய்ய இங்கிலாந்திலும் வேல்ஸிலும் எட்டு சோதனைக் கூடங்கள் உண்டு.

நவீன சாதன வசதிகளைச் சிறந்த முறையில் பயன் படுத்திக் கொள்வதில் போலீஸ் படையினர் முன்னணி யில் நிற்கிருர்கள். போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும் விபத்து விசாரணைக்குச் செல்லவும், நகர்க் காவற்பணிக் கும் போலீஸ் படையினர் மோட்டார்களையும் மோட்டார் சைக்கிள்களையும் உபயோகிக்கிருர்கள். உலா வரும் போலீஸார் தலைமை அலுவலகத்துடன் தொடர்புள்ள ஒவ்வோர் மோட்டாரிலும் ரேடியோ வசதியுண்டு.

நதிக் காவற் படை

பிரிட்டனில் நதியோரப் பாதுகாப்புக்காக தனியாக போலீஸ் படையுண்டு. நதிக்கரைத் துறைமுகங்களுக்கு பாதுகாப்பு அளித்தல், கப்பற் போக்கு வரத்தை ஒழுங்கு செய்தல், படகுகளையும் சிறு கப்பல்களையும் ஒதுக்கி நிறுத்த ஏற்பாடு செய்தல் முதலிய பணிகளை இந்தப் போலீஸ் படை எற்றுக்கொண்டிருக்கிறது. உதாரண மாக தேம்ஸ் நதியில் போக்குவரத்து ஒழுங்கு செய்வ துடன் ரேவுதுறைகளையும் கிடங்குகளையும் பாதுகாக்கும் பொறுப்பை மெட்ரோபாலிட்ன் போலீஸ் படையின் தேம்ஸ் நதிப் பிரிவுப் படை ஏற்றுக்கொண்டிருக்கிறது. லண்டன் துறைமுகப் பாதுகாப்பை துறைமுகப் போலீஸ் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

நதிக்காவற் படையினர், ரோந்து வேலைக்கு மோட் டார் படகுகளை உபயோகிக்கிருர்கள். இவற்றில் ரேடியோ, ஸெர்ச் லைட், முதலுதவி உபகரணங்கள், மீட் சிப் பணிக்கு வேண்டிய சாதனங்கள், சமிக்ஞைக்

கருவிகள், தற்காப்புக்கான ஆயுதங்கள் முதலியவைகள் உண்டு.

பெண்கள் போலீஸ் படை

முதல் உலகப் போர்க் காலத்தில்தான், பிரிட்டனில் பெண்கள் போலீஸ் படை நிறுவப்பெற்றது. இப்போது நாட்டின் பல பகுதிகளில் உள்ள போலீஸ் படைகளில் பெண்கள் திறமையுடன் பணியாற்றி வருகிறுர்கள். துப் பறியும் பிரிவிலும் பெண்கள் பணியாற்றி வருகிறுர்கள். ஸ்காட்லாந்தில், திருமணம் செய்து கொண்ட பெண்கள் போலீஸ் படையில் பணியாற்ற முடியாது. படையைச் சேர்ந்த பெண் திருமணம் செய்து கொண்டால் உடனே பதவியிலிருந்து விலகவேண்டும். இங்கிலாந்திலும் வேல்ஸிலும் பணியாற்றும் பெண்களுக்கு இந்த நிபந் தனை இல்லை.

# இளைஞர் உணவு விடுதி

**ஹா**லந்தில், ஷிவெனின்கென் என்னுமிடத்தில் உள்ள இளைஞர் உணவு விடுதியைப்பற்றி யறிந்த வெளி நாட்டார் அனைவரும் ஏன் அது போன்றதொரு விடுதி தமது நாட்டில் இல்லை என்று சிந்தித்தார்கள்.

சர்வதேச இளைஞர் உறவுக்கான டச்சுச் சங்கத்தாருக்கு அந்த உணவு விடுதியைத் தொடங்கும் எண்ணம் தோன்றியது. முக்கியமாக, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இளைஞர்களின் விலாசங்களை மற்றவர்களுக்கு அனுப்பித் தருவதன் மூலம் அவர்களிடையே நட்பைப் பெருக்குவதில், இந்தச் சங்கம் பணியாற்றி வந்தது. ஷிவெனின் கென்னில் தனிப்பட இருந்த ஒரு பெரிய வீடு காலியானதும், இளைஞர் விடுதியைத் தொடங்க வேண்டும் என்று இச் சங்கம் முடிவு செய்து அதற்கென நிதி ஒன்றை வசூலித்தது. அந்த வீட்டை வாங்குவதற்கான தொகையை ஹேக் நகர சபை வழங்கியது.

அந்த விடுதி ஒன்றரை ஆண்டுக்காலமாக இயங்கி வருகிறது. இவ்வளவு குறுகிய காலத்துக்குள் அது பிரபலமடைந்ததை யடுத்து, அதே போன்ற மற்ருெரு விடுதி சில தெருக்களுக்கப்பால், விரைவில் தொடங்கும் நிலையில் இருக்கிறது.

அந்த விடுதிக்கு அப்படி என்ன தனிச் சிறப்பு? அங்கே இருக்க இடமும் உண்ண உணவும் மட்டும் அளிக்கவில்லை. அங்கேவந்து தங்கும் பலநாட்டு இளைஞர்

களிடையேயும் அது நட்பை வளர்க்கிறது. இளைஞர்கள் இரண்டொரு இரவுகள் மட்டும் தங்கிச் செல்லும் விடுதி போன்றதல்ல அது. அங்கு வந்து தங்குபவர்கள் தம் சொந்த வீட்டில் இருப்பது போன்று எண்ண வேண்டும் என்பதே அந்த விடுதியின் குறிக்கோள். பெரும்பாலான வர்கள் அங்கே குறைந்தது ஒருவார காலமாவது தங்கி, தம்முடன் பிரயாணம் செய்பவர்களைத் தவிர, மற்றவர் களையும் அறிமுகப் படுத்திக் கொள்கிறார்கள்.

அங்கே வந்து தங்கும் விருந்தினர்களுக்கென— ஆண்களுக்கு ஒன்றும் பெண்களுக்கு ஒன்றுமாக— இரண்டு விடுதிகள் இருக்கின்றன. ஒரு சமயத்தில் 68 பேர் அங்கே தங்கியிருக்கலாம். குளியலறை முதலிய வசதிகளும் தனியே இருக்கின்றன. மேலும் விருந் தினர்கள், விடுதி வேலைகளில் துணை புரிய வேண்டிய தில்லை. உணவு பரிமாறுவதற்கும் ஏற்பாடுகள் செய் திருக்கிறார்கள்.

அந்த விடுதியில் வேலை செய்பவர்களும் இளைஞர் களே. நட்பை வளர்ப்பதற்காக, அந்த விடுதியின் நிர் வாகி மேற்கொள்ளும் முயற்சிகளும் இளமை நிரம் பியவை. அவருக்கு மிகுந்த வேலையுண்டு. பல்வேறு மொழிகளில், அந்த விடுதிக்கு வரும் கடிதங்களை அவரே கவனிக்கிறார். அவை அனைத்திலும் அவர் ஓர் ஆர் வத்தை ஏற்படுத்திக் கொள்கிறார்.

உணவு விடுதியை நிறுவுவதில் இளம் நிர்வாகி உதவி புரிந்தார். இரண்டாவதாக மற்றொரு விடுதியை நடத்தும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். கடந்த சில மாதங்களாக, அழகும் திறமையும் மிகுந்த அவரது மனைவி, அந்த விடுதியின் நிர்வாகத்தில் அவருக் குத் துணைபுரிகிறாள். நிர்வாகியின் மனைவிக்கு வயது

இருபதுதான். அந்த விடுதியில் உள்ள மற்ற விருந்தினர்களுக்கும் அவருக்கும் வேறுபாடு இல்லை.

மற்ற உணவு விடுதிகளுக்குள்ள கஷ்டங்கள் தனிச் சிறப்புடைய இந்த விடுதிக்கும் உண்டு. உல்லாசப் பிரயாணத்துகுரிய காலத்தில், சில சமயத்தில், ஒரு நாளைக்கு முந்நூறு விருந்தினர்கள் கூட இந்த விடுதிக்கு வருவதுண்டு. எனினும் விடுதியிலும் அதன் இணைப்புப் பகுதிகளிலும் நூறு பேரை மட்டுமே அமர்த்த முடியும். இளைஞர் கோஷ்டிகள் முன்கூட்டியே அந்த விடுதியில் இடத்தைப் பதிவு செய்து கொள்கின்றன. சில சமயங்களில் ஒன்று அல்லது ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பே பதிவு செய்து கொள்வதும் உண்டு. மற்றக் காலங்களில் ஆராய்ச்சிக் குழுவினருக்கும் மகாநாடு நடத்துவோருக்கும் இடமளிக்க அந்த விடுதி முயல்கிறது.

அந்த விடுதி ஷிவெனின்கென்னில் அமைந்திருப்பதால் அங்கு வந்து தங்குபவர்களுக்குப் பலவித வாய்ப்புகள் கிடைத்துள்ளன. மாலை நேரத்தில் கடுமையான வாக்குவாதத்தில் கொண்டு போய் விடும் என்றாலும் சண்டையில் முடிவதில்லை. மாலையில், எப்போதாவது வந்திருக்கும் விருந்தினர்களில் சிலர் பாட்டுப் பாடியும் நாடகமாடியும் மற்றவர்களை மகிழ்ச்சியூட்டுவார்கள். பல நாடுகளைப் பற்றிய படங்களை அடிக்கடி திரையிடுகின்றனர்.

விருந்தினர் அதிகமாக வந்து தங்கும் காலங்களில், சிறு சிறு உல்லாசப் பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்வார்கள். அனைவரிடையேயும் நட்பை வளர்ப்பதற்கு இது பெரிதும் பயன்படுகிறது. பார்த்துப் பார்த்து அலுத்துப் போன பழைய இடங்களுக்கு அந்தப் பிரயாண கோஷ்டி

கள் அனுப்பப்படுவதில்லை. வடி நிலத்திட்ட அமைப்பு, கடலணை போன்ற கவர்ச்சி மிக்க இடங்களுக்கே அவர்களை அனுப்புவார்கள். பெரும்பாலும் நிர்வாகியோ அல்லது அவரது மனைவியோ அந்த கோஷ்டியுடன் செல்வார்கள். உல்லாசக் கோஷ்டிகளில் சேர்ந்து கொள்வது அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது. விருந்தினர்களில் 15 முதல் 20 சதவிகிதம் பேர் டச்சுக்காரர்களாக யிருப்பார்கள். இவர்கள் சாதாரணமாக இத்தகைய உல்லாசப் பிரயாணத்தின் போது மொழிப் பெயர்ப்பாளரா யிருந்து உதவி புரிவார்கள்.

ஏறக்குறைய உலகத்தில் உள்ள நாடுகள் எல்லாவற்றையும் சேர்ந்த மக்கள் அந்த உணவு விடுதியில் தங்கி யிருந்திருக்கிறார்கள். அந்த விடுதியில் உள்ள விருந்தினர் புத்தகத்தில், ஹீப்ருவும் அரபு மொழியும் உள்பட எல்லா மொழிகளின் எழுத்துக்களையும் காணலாம். (அந்தப் புத்தகத்தில் கையெழுத்திட வேண்டும் என்ற கட்டாய மில்லாததால், அங்கு வந்து தங்கிய எல்லாருடைய கையெழுத்துக்களும் அதில் இல்லை.)

தத்தம் மதக் கொள்கைகளுக்கு ஏற்றபடி உணவு உட்கொள்வதற்கும் அந்த விடுதியில் வகை செய்யப்பட்டிருக்கிறது. எனினும், விருந்தினர்களுக்கான உணவுப் பட்டியல் பொதுவானதுதான். அந்த விடுதியில் சமையல் செய்பவர், ஒரு காலத்தில் மாலுமியாக இருந்தவர். அவர் பல மொழிகளைப் பேசுவதில் வல்லவர். உணவு வகைகளைத் தயாரிக்கும் போது வந்து தங்கியிருப்பவர்களின் நாடு, பண்பாடு முதலியவற்றையும் கருத்தில் கொண்டே செய்கிறார்.

# கொய்த மலர்கள்

---

பிரார்த்தனை

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண் பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓர்ஊ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத் தும்நீ
இறைவன்நீ ஏ(று) ஊர்ந்த செல்வன் நீயே.

—திருநாவுக்கரசர்

பகவானே, நீர் சக்தி வடிவானீர்
எனக்குச் சக்தியை அளியும்
நீர் வீர்ய வடிவானீர்
வீர்யத்தை எனக்கு அருளும்
நீர் பலத்தின் வடிவானீர்
எனக்குப் பலத்தை அருளும்
நீர் ஆற்றல் வடிவானீர்
எனக்கு ஆற்றலை அளியும்
நீர் தீர வடிவானீர்
எனக்குத் தீரத்தை அருளும்
நீர் பொறுமை வடிவானீர்
பொறுமையை எனக்கு அருளும்.

—சுக்ல யஜுர் வேதம்

திருப்தி

நான் விரும்பித்தேடும் விஷயங்களைக் காட்டிலும், கடவுள் எனக்காகத் தேடித் தருபவை, எனக்கு மிகவும் நன்மையைப் பயக்கும் என நான் நினைப்பதால், எனக்கு நேரிடும் சம்பவங்கள் அனைத்திலும் நான் எப்போதும் திருப்தியடைந்தே வருகிறேன்.

—எபிக்டிடஸ்

மாயை

கண்டுபிடிக்கப்பட்டதும் திருடன் ஓடிப்போய் விடுகிறான். அது போலவே மாயையின் சுபாவம் இன்னதென்று நீ ஆய்ந்து கண்டுபிடித்துவிட்டால் அது உன்னிடமிருந்து ஓடிப்போய்விடும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

தனியே

பிறப்பதும் தனியே இறப்பதும் தனியே
நல்வினை இன்பமும் அல்வினைத் துன்பமும்
அனுபவிப்பதும் தனியாகத்தான்.

—மனு

சத்திய வழி

சத்தியத்தைப் பரிபூரணமாகக் கடைப்பிடிக்கும் மனிதன் இவ்வுலகில் இல்லை. பரிபூரண சத்தியம் என்பது கடவுளின் தன்மை. மானிடர்களாகிய நாம் பரிபூரணமில்லாத சத்தியத்தைத்தான் அனுஷ்டிக்க முடியும். எனவே, சத்தியத்தை நாம் காணும் வழியில் பின்பற்ற வேண்டும். அம்மாதிரி சத்தியத்தை நாடினால், தவறான திசையில் செல்ல மாட்டோம்.

—காந்தியடிகள்

எல்லோரும் செய்யக்கூடியது

இன்னொரு மனிதன் பேசுவதை அனுதாபத்தோடு கேட்டுக் கொண்டிருப்பது மிகவும் சிநேகபாவமான செய்கையாகும். இதை நாம் எல்லோரும் செய்ய முடியும்.

—லோரென் கெரோல்

வெற்றி

பிஜர்ண்ஸன் என்பவர் நோபல் பரிசு பெற்ற நார்வே நாட்டுக் கவிஞர். அவரிடம் ஒரு பத்திரிகை நிருபர் சென்று, "உங்கள் வாழ்க்கையில் மயிர்கூச்செறியக் கூடியதாகவும், ஆனல் உங்களுக்கு வெற்றியாகவும் அமைந்த ஒரு நிகழ்ச்சியைச் சொல்லுங்கள்" என்று கட்டார்.

பிஜர்ண்ஸன்: என் வீட்டை ஒரு தடவை என் அரசியல் விரோதிகள் முற்றுகையிட்டு, வீட்டு ஜன்னல்களை யெல்லாம் உடைத்தெறிந்து விட்டார்கள். அப்போது "ஆம். எங்கள் நாட்டை நாங்கள் நேசிக்கிறோம்" என்ற பாட்டைப் பாடிக்கொண்டிருந்தார்கள். இந்தச் சம்பவமே எனக்கு வெற்றியாகவும், மயிர்க் கூச்செறியச் செய்யக்கூடியதுமாகவும் அமைந்த சம்பவம்.

நிருபர் :—இப்படிப்பட்ட பயங்கரமான சம்பவம் உங்களுக்கு வெற்றியாக எப்படி இருக்க முடியும்.

பிஜர்ண்ஸன் .—அவர்கள் பாடிக் கொண்டிருந்த பாட்டு நான் எழுதியது.

மெஜாரிடி

எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிறோம் என்பதை நினைத்துச் சந்தோஷப்படுகிறவர்கள் பயங்கொள்ளிகள் தாம். மெஜாரிடியினரின் செயல் மைனரிடிகளைக் கட்டுப்

படுத்தும் என நம்புவது மூட நம்பிக்கையும், யோக்கிய மற்றதுமாகும்.

—காந்தியடிகள்

ஆண்டவன் எங்கே ?

ஆண்டவனைத் தேடி எங்கே போகிறீர்கள் ? துன்பப்பட்டவர்கள், பலவீனர்கள், ஏழைகள் இவர்கள் எல்லோரும் தெய்வ வடிவங்களே அல்லவா ? ஏன் முதலில் இவர்களை ஆராதிக்கக் கூடாது? கங்கைக் கரையிலே கிணறு வெட்டுவார் உண்டா ? ஏழைகளையே கடவுளாய்க் கொள்ளுங்கள். அவர்களைப் பற்றிச் சிந்தியுங்கள். அவர்களுக்குச் சேவை செய்யுங்கள். இடைவிடாமல் அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள். அப்போது கடவுள் உங்களுக்கு வழி காட்டுவார்.

—சுவாமி விவேகாநந்தர்

காற்றும் பரமனும்

காற்று நல்ல வாசனையையும் கெட்ட வாசனையையும் கொண்டு வீசுமாயினும், அவைகளால் விகாரப்படுவது இல்லை. பரம்பொருளும் அந்தக் காற்றைப் போன்றதே.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

ஒரு பிரார்த்தனை

பகவானே ! மாற்ற முடியாத விஷயங்களை, பரம அமைதியுடன் பொறுத்துக் கொள்ளத் தக்க பலத்தை எங்களுக்கு அருளும். மாற்றக் கூடிய, மாற்ற வேண்டிய விஷயங்களை மாற்றுவதற்குத் தேவையான தைரியத்தை எங்களுக்கு அருளும். அவை யாவை, இவை யாவை என்று பகுத்துக் கண்டறியத் தக்க விவேகத்தையும் எங்களுக்கு அருளும்.

—அட்மிரல் ஹார்ட்

விஞ்ஞான நிபுணர்கள்

ஐயாயிரம் வருஷங்களுக்குப் பின்பு, உலகம் எப்படி யிருக்கப் போகிறது என்பதை அப்படியே சித்திரம் செய்து காட்டிவிட வல்லவர்கள் விஞ்ஞான நிபுணர்கள். ஆனால் அடுத்த வாரம் உலகத்தில் என்ன நடக்கப் போகிறது என்பதைச் சொல்ல மாத்திரம்தான் அவர் களால் முடியாது.

—ஒரு மேலை நாட்டுப் பத்திரிகை

ஆண்களின் ஏமாற்று வேலை

பாத்திரங்களைக் கழுவவும், வீடு பெருக்கி மெழுகவும் தனித்திறமை வேண்டும் என்றும், அது பெண்களுக்கே உண்டு என்றும் ஆண்கள் பாசாங்கு செய்து வருகிறார் கள், அல்லவா? இந்தப் பாசாங்கின் மூலம் உலகம் தோன்றிய காலம் தொட்டு, இன்று வரையில், ஆண்கள் எவ்வளவு ராத்தல் சதையைத் தேயாமல் காப்பாற்றி வந்திருக்கிறார்கள் என்று கணக்குப் போட்டுப் பார்த்தால் அது ரசமாயிருக்கும்.

—ஹீவுட் புரூஸ்

சித்திரக்காரர்கள்

சித்திரக்காரர்களைப் பின்வரும் ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம் :

1. தாம் கண்டதைச் சித்தரிப்போர்.
2. தாம் கண்டதென்று தாம் நினைத்ததைச் சித்த ரிப்போர்.
3. தாம் கண்டதைத் தாம் சித்தரிப்பதாக நினைப் போர்.
4 தாம் கண்டதென்று, தாம் நினைப்பதை தாம் சித்தரிப்பதாக நினைப்போர்.
5. தாம் சித்தரிப்பதாக நினைப்போர்.

—ஐரிஷ் பத்திரிகை

அனுபவம்

பிரிட்டனில், கலாசாலை நிர்வாகத்தில் நிபுணரான ஒரு தலைமை ஆசிரியர் இருந்தார். ஒரு சமயம் ஏதோ ஓர் உயர்ந்த உத்தியோகத்துக்கு ஆள் பொறுக்கும் தேவை ஏற்பட்டது. கலாசாலையின் சேவையில் இருபது ஆண்டுகளாக இருந்துவரும் ஒருவரை விட்டு விட்டு, புதிதாய் வந்த ஒருவரை, அந்தப் பதவிக்கு அவர் நியமித்தார்.

இதைக்கண்ட இருபது ஆண்டு அனுபவசாலி வருத்தமடைந்தார். "அனுபவ ரீதியான வரிசைக் கிரமத்தையே உதாசீனம் செய்து, இப்படிச் செய்திருக்கிறீர்கள்! இது நியாயமா?" என்று தலைமை ஆசிரியரை அவர் கேட்டார்.

"இல்லவே இல்லை, என் நண்பரே, உமக்கு இருபது ஆண்டு அனுபவம் இருப்பதாக நீர் நினைத்துக்கொண்டிருக்கிறீர். அதுதான் இல்லை. ஓர் ஆண்டு அனுபவம் தான் உமக்கு ஏற்பட்டிருக்கிறது. அது இருபது தடவை திரும்பத் திரும்ப நேர்ந்திருக்கிறது; அவ்வளவுதான்" என்றார் தலைமை ஆசிரியர்.

பயங்கரச் செயல்கள்

அரசாங்கமோ, பொதுமக்களோ பயங்கரச் செயல்கள் புரிந்து கொண்டிருந்தால், அங்கே ஜனநாயக உணர்ச்சி வேரூன்றாது,

—காந்தியடிகள்

துறவு என்றால் என்ன ?

துறவு என்றால் என்ன? உலகை வெறுத்தோ அல்லது உலக வாழ்க்கையில் தோல்வியும் ஏமாற்றமும் அடைந்தோ உலகைத் துறப்பது ஒரு நாளும் உண்மைத் துறவாகமாட்டாது. ஆனால் சமுதாயத்தின் கண்

ஆக்கமும், சீரும், சிறப்புமுற்றிருக்கையில், இவை யாவற்றிலும் சிறந்தது பாரமார்த்தீகம் என்று அறிந்து அதை அடைவான் வேண்டி எல்லாவற்றையும் தியாகம் செய்வதுதான் உண்மைத் துறவாகும்.

—கைவல்ய சைதன்யர்

புகழ்

இறந்த மனிதனின் இதயத்தின்மீது சொரியப்படும் மலர்தான் புகழ்.

—மதர் வெல்

நாகரிகம்

உண்மையான நாகரிகம் என்பதுதான் என்ன? அது நாடோ, நகரமோ. பொருள்வளமோ, ஆடம்பரமோ செல்வமோ அல்ல. கல்வியறிவின் பரப்பும், அருமையான இலக்கியங்களும் கூட அல்ல. அவை நல்லவைகளாக இருக்கலாம். அவை நாகரிகத்துக்கு எடுத்துக் காட்டல்ல.

உண்மையான நாகரிகத்தின் சின்னங்கள், ஏழைகளுக்கும் துயரப்படுபவருக்கும் வருந்தும் எண்ணத்திலும், பெண்களைப் பற்றித் துணிவான மதிப்பும் கௌரவமும் தரும் தன்மையிலும், மனித சமுதாயத்தின் சகோதரத்துவத்தை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் பக்குவத்திலும், ஜாதி, மத, நிற இன பேதங்களைக் கடந்து, பலம் ஒன்றுதான் உலகை ஆளும் சக்தி எனக் கருதாமல் இருக்கும் தன்மையிலும், நியாயத்துக்காகப் போராடும் நிர்த்தாட்சண்யமான பக்தியிலும்தான் காணப்படுகின்றன. அந்தமாதிரியான நாகரிகம்தான் சமாதானத்தை நிலைநிறுத்த முடியும்.

—பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்

கற்றது என்ன ?

நாம் பறவைகளைப் போல ஆகாயத்தில் பறக்கவும், மீன்களைப் போல நீரில் நீந்தவும் கற்றுக் கொண்டோமே ஒழிய, மனிதர்களாய் பூமியில் வாழ இன்னும் தெரிந்து கொள்ளவில்லை.

—எஸ். ராதாகிருஷ்ணன்

ஆத்மா

தனி இடத்து அமர்ந்து, தெளிவுற விசாரித்து. 'என்னுடையது' என்பவை எல்லாம் தள்ளிய பின் எதைத் தள்ள முடியவில்லையோ அதுவே ஆத்மா.

—திரிபுர ரகஸ்யம்

கீதையின் பொருள்

மகான் சைதன்யர் தென்னாட்டில் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது ஓர் அந்தணர் கீதையை ஓதிக் கொண்டிருந்ததைக் கண்டார். அந்தணர் குறைகளுடன் செய்யுட்களை சொல்லியதிலிருந்து, வட மொழி அறிவு அவருக்கு இல்லை என்பது எளிதில் விளங்கிற்று; ஆயினும் படிக்கையில் அவருடைய கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகப் பெருகிக் கொண்டிருந்தது.

சைதன்யர் அங்கேயே நின்று கொண்டிருந்தார். பாராயணம் முடிந்ததும், துறவி யொருவர் அருகில் நிற்பதைக் கண்ட அந்தணர், அவர் கால்களில் விழுந்து வணங்கினார். "ஹரி" என்று சொல்லிவிட்டு, சைதன்யர், "ஐயா, செயயுட்களின் பொருள் தெரியுமா" என்று கேட்டார்.

"சுவாமி! அறிவற்ற எனக்கு கீதையின் பொருள் எவ்வாறு விளங்கும்? ஆயினும் படிக்கையில் ஓர் தேரையும், அதில் அம்பையும் வில்லையும் கைகளில் ஏந்திய அர்ஜுனன் வீற்றிருப்பதையும் காண்கிறேன். அவ

னுக்கு அருகில் குதிரைக் கயிற்றை ஒரு கையிலும், மற்றொரு கையில் சவுக்கையும் ஏந்திய கார்முகில் நிறங் கொண்ட கண்ணபிரான், அர்ஜுனனிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருப்பதையும் காண்கிறேன். கண்ணன் பேசுகையில் அவனுடைய உதடுகள் அசையும் அழகைக் கண்டு நான் உலகையே மறந்து விடுகிறேன். பாராயணம் முடிவது கூடத் தெரிவதில்லை'' என்று பதிலளித்தார் அந்தணர்.

உடனே சைதன்யர், அத்தணரை மார்புடன் தழுவிக் கொண்டு, "சுவாமி! உமக்குத்தான் கீதையின் பொருள் நன்றாய்த் தெரிகிறது" என்று சொல்லி விட்டுச் சென்றாராம்.

—கல்யாணி

### நன்னெறி

"நன்னெறியில் ஒழுகி வருபவனுக்குப் பயன் ஒன்றுமே யில்லையா?" என்று கேட்டால், "பயன் இருக்கவே இருக்கிறது"என்றுதான் நான் உரைப்பேன். நன்மையும் நியாயமுமான ஒரு காரியத்தைச் செய்வதினும் மேலான ஒரு பாக்கியத்தையா நீ நாடுகின்றனை? இந்தப் பாக்கியமும் உளதோ?

—எபிக்டிடஸ்

### வந்த காரியம்

நீ உலகிற்கு வந்தது சேவை செய்வதற்கே; பிறரை அடக்கி ஆள்வதற்கு அன்று.

—தாமஸ். அ. கெம்பிஸ்

### பேதம்

பரம்பொருளே! உனக்கும் எனக்கும் இடையில் "நான்" "நீ" என்ற பேதம் மறையும் நாள் எந்நாளோ?"

—முகமதிய ஞானி பிஸதாமி

இரக்கம்

அமெரிக்காவின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஒருவர் ஒரு சபைக்குச் சென்று கொண்டிருந்தார். வழியில் சேற்றில் சிக்கிக் கொண்டு தவித்த ஒரு பன்றியைக் கண்டார்; மேலே வருவதற்கு முயல முயல, அப்பன்றி அதிகமாகச் சேற்றில் அகப்பட்டு வருந்தியது. உடனே குடியரசுத் தலைவர் சேற்றில் குதித்து பன்றியை வெளியேற்றினார். அதனால் அவருடைய ஆடை சேறுபட்டுப் பாழாயிற்று. வீட்டுக்குச் சென்று உடையை மாற்ற நேரமில்லாததால், தலைவர் நேரே சபைக்குச் சென்றார். அவருடைய கோலத்தை கண்ட சபையினர் வியப்புடன் காரணத்தை வினவினர். தலைவர் கூறியதைக் கேட்ட அங்கத்தினர், தலைவரின் இரக்கத்தை மிகவும் புகழ்ந்தனர்.

அதைக் கேட்ட தலைவர், "சபையோர்களே! நீங்கள் வீணாக என்னைப் புகழ்கிறீர்கள். எனக்குப் பன்றியின் மேல் இரக்கம் ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை. அது சேற்றில் சிக்குண்டு வருந்தியதைக் கண்டு என் மனம் மிகவும் வருந்தியது. அந்த வருத்தத்தைப் போக்கவே, பன்றியை நான் வெளியேற்றினேன். அதனால் என் மனம் நிம்மதி அடைந்தது. இதை, பன்றிக்கு நான் செய்த உதவி எனக் கொள்ளலாமா? அல்லது என் மனத்தில் ஏற்பட்ட வருத்தத்தைப் போக்கச் செய்த செயலாகக் கொள்ளலாமா? நீங்களே கூறுங்கள்" என்றார்.

எவ்வுயிர்க்கும் ஏற்படும் துன்பத்தைக் கண்டு, நம் மனத்திலே தோன்றும் வருத்தத்தைப் போக்க நாம் செய்யும் செயலே இரக்கம் எனப்படும்.

மார்க்கஸ் ஔரேலியஸ்

1. மனிதன் எல்லோருடைய அபிப்பிராயங்களையும் பின்பற்ற வேண்டியதில்லை. இயற்கையோடு இணங்கி நல்வழி நிற்பவரின் கருத்தையே பின்பற்ற வேண்டும்.

2. எப்பொழுதும் மகிழ்வுடன் இரு. பிறரால் வரும் சாந்தியை யாவது பிறருடைய உதவியை யாவது தேடாதே. மனிதன் தன் பலத்தைக் கொண்டே நிமிர்ந்து நிற்க வேண்டும்.

3. தீய எண்ணங்களுக்கு ஒரு பொழுதும் இடங் கொடாதே. எப்பொழுதாவது சிறிதேனும் இடம் கொடுத்து விட்டால் பின் தடுமாற்ற மின்றி நன்மையை நாடுதல் கஷ்டமாய்விடும்.

துன்பம்

இறைவன் அருளிய துன்பத்தில் மகிழ்ச்சிக் கொள் ளாதவன் உண்மைப் பக்தனல்லன்.

—ஷாகீக்

கடவுளும் மனிதனும்

மனிதன் கடவுளை நோக்கி நடந்து வரும்பொழுது, பகவான் மனிதனை நோக்கி ஓடி வருகிறார்.

—குர் ஆன்

உபதேசம்

உங்கள் வாழ்க்கை மூலம்தான் நீங்கள் பிறருக்கு உபதேசம் செய்யலாம். "என்னை வந்து முகர்ந்து பார்' என்று ரோஜா பிறரை அழைப்பதில்லை.

—காந்தியடிகள்

கவிஞன்

கலைமீது உண்மையான பக்தியுள்ளவன் மனைவி யைப் பட்டினி போடுவான்; குழந்தைகள் வெறுங்

காலோடு நடப்பார்கள் ; அவன் தாய் துயரமடைவாள் , வயது எழுபது ஆனாலும் தன் கலையைத் தவிர எதையும் தொடக்கூட மாட்டான் கவிஞன்.

—ஷேக்ஸ்பியர்

யாருக்கு லாபம்

பயனற்ற, உற்சாகமில்லாத, ஆவல் ஊட்டாத புத்தகக் குவியல்களை நம் பிள்ளைகள் தலையில் சுமத்துகிறோம்; புத்தகத்தில் அடங்கிய பொருளின் பெருமை கருதியல்ல; சில ஆசிரியர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு. புத்தகம் விற்றால் இவர்களுக்குத் தானே லாபம் கிடைக்கும் என்ற எண்ணந்தான் இதற்குக் காரணம்.

—பெஸ்டலோயி

சும்மா இராதே

படிக்கத் தெரிந்த எவனும் சும்மா இருக்கக்கூடாது; மற்றவர்களுக்குச் சொல்லித்தர வேண்டும். திண்ணைகள் எல்லாம் சின்னச் சின்னப் பள்ளிக்கூடங்களாக வேண்டும். படிக்கத் தெரியாதவர்களை அழைத்துப் படிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

—ராஜாஜி

காடுகள்

இந்தியாவிலுள்ள காடுகளின் மொத்த விஸ்தீரணம் இரண்டு லட்சத்து எண்பத்தோராயிரம் சதுர மைல். அதாவது நாட்டின் மொத்த நிலப்பரப்பில் சுமார் 22 சத விகிதம்.

# ஹூவர் அணை

சில ஆறுகளில் தண்ணீர் வந்தாலும் தொல்லை; வராவிட்டாலும் வறட்சி, பஞ்சம்; இந்தியாவில் பிரம்ம புத்திரா நதி அதற்கோர் எடுத்துக்காட்டு. வெள்ளத் தடுப்புக்கும் வீணுகும் தண்ணீரைத் தேக்கி வைத்துப் பயன்படுத்துவதற்கும், விசை உற்பத்திக்கும் இந்திய அரசாங்கம் திட்டங்கள் பல வகுத்து நிறைவேற்றி வரு கிறது. ஆற்றைக் கட்டுப்படுத்தி ஆக்கப் பணிக்கும் பயன்படுத்தும் மனித முயற்சியின் வெற்றிக்கு ஓர் ஒப் பற்ற சான்று அமெரிக்காவிலுள்ள ஹூவர் அணை.

கொலராடோ ஆறு அமெரிக்காவில் தென்மேற்குப் பகுதியில் பாய்வது; தட்டையான மூடியையுடைய பாறை களை அறுத்தறுத்துக் கிடு கிடு பாதாள வழி யமைத்து வளைந்து நெளிந்து செல்வது; "கிரான்ட் கான்யான்" என்று உலகம் புகழ் மலைக் கணவாய்களை இவ்வாறு அமைத்திருப்பது; வறண்ட காட்டினூடே வளைந்தோடு வது; அதன் வடிகால் பரப்பு அமெரிக்காக் கண்டத்தில் அமெரிக்க நாட்டின் நிலப் பரப்பில் பன்னிரண்டில் ஒன்று. இது சில சமயம் வெள்ளக் காடாகக் காட்சி யளித்ததுண்டு; சில சமயம் தண்ணீர் இல்லாப் பாலை வனமாகக் காய்ந்து கிடப்பதுண்டு. பெருகியும் கெடுக் கும், பெருகாமலும் கெடுக்கும் ஆருக இருந்தது கொலராடோ!

ஆற்றுப் பெருக்கை அணைக்கட்டித் தேக்கி வைத் தால் தேவையானபோது தண்ணீர் கிடைக்கச் செய்ய

லாம். மின்சாரமும் எடுக்கலாம் என்று 1928-ஆம் ஆண்டில் அரசாங்க நில மீட்சித் துறையினருக்கு அமெரிக்க சட்ட சபை கொலராடோ ஆற்றின் குறுக்கே அணை எழுப்ப அதிகாரம் வழங்கியது.

அதன் பயனாய், தற்காலப் பொறிவியல் திறமைக்கு ஒரு புகழ் மாலையாய், அமெரிக்காக் கண்டம் முழுவதிலும் உயரத்தில் ஈடு இணை அற்றதாய் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஹெர்பர்ட் ஹூவரின் பெயரால் எழுந்தது இந்த அணை. பாழ் நிலமாய்க் கிடந்த நிலமெல்லாம், அணைக்கட்டு முடிந்தது முதல், அமெரிக்காவிலேயே மிக்க நல்ல வளம் கொழிக்கும் பண்ணை நிலமாக மாறி விட்டது.

கலிபோர்னியா, அரிசோனா ராஜ்யங்களில் ஏழரை லட்சம் ஏகர் நிலத்துக்கும், மெக்ஸிகோவில் நான்கு லட்சம் ஏகர் நிலத்துக்கும் ஹூவர் அணையினால் தட்டாமல் தண்ணீர் கிடைத்து வருகிறது. கலிபோர்னியாவிலுள்ள இம்பீரியல், கோச்செல்லா பள்ளத்தாக்குகளில் விளையும் காய்கறிகளும் கனி வகைகளும் இந்த அணையின் பயனான நீர்வளத்துக்கு நல்ல சான்றாகும். அக்காய், கனிகள் ஏராளமாகவும் மிகச் சிறந்தவையாகவும் இருப்பதால் அவற்றை அமெரிக்காவில் வெகு தொலைவிலுள்ளார் வீடுகளிலும்; வேறு பல நாடுகளிலும் கூடக் காணலாம்.

இந்த அணைக்கட்டில் விளைகின்ற மின்சாரம் நெடுந் தொலைவு சென்று, இல்லங்கள், பண்ணைகள், கடைகள், அரசாங்கங்கள் பலவகைத் தொழிற்சாலைகள் முதலியவற்றுக்கெல்லாம் பயன்படுகிறது. அதன் உதவியால் புதுப் புதுத் தொழிற்சாலைகள் பல தோன்றியுள்ளன; ஓய்ந்து போன பல சுரங்கங்களில் மீண்டும் வேலை நடக்கிறது.

மலிவாக மின்சாரம் கிடைத்ததால் லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில் தொழில் வளமும் மக்கள் தொகையும் திடீ ரென்று பெரிதும் கூடின.

இந்த அணையின் உயரம் 726 அடி. கருங் ''கான் யான்'' என்றும் மலையிடுக்கின் குறுக்கே, ஒரு புறம் நிவாடா ராஜ்யத்தின் எல்லையையும் மறுபுறம் அரிசோனு ராஜ்யத்தின் எல்லையையும் வளைத்துக் கொண்டு அது நிற்கிறது.

அதன் பின்னே தேங்கி நிற்கும் தண்ணீர் கண் கொள்ளாக் காட்சியாகும். அழகுமிக்க இந்த "மீட்" ஏரியையும் அணையையும் உலகமெங்குமிருந்து லட்சக் கணக்கான மக்கள் வந்து கண்டு களித்திருக்கிருர்கள். சராசரியாகப் பார்த்தால் இரண்டு ஆண்டுகளில் கொல ராடோ ஆற்றில் ஓடும் தண்ணீரை இந்த ஏரி தேக்கி வைத்துக் கொள்ளும். இவ்வளவு பெரிய செயற்கை ஏரி உலகில் வேறெங்கும் இல்லை.

அணைக்கட்டு உடைபட்டுப் புரண்டு போகாமல் தடுக்க அதன் கனமே பாதுகாப்பாக அமையும்படி கட்டு வது ஒரு முறை; ஹூவர் அணை அந்த முறையில் அணையாகக் கட்டப்பெற்றுள்ளது. இந்தப் பொறியியல் முறை மூன்று நூற்ருண்டுகளுக்கு முன்பு ஸ்பெயின் நாட்டில் தோன்றியதாகும். கான்கிரீட்டினுல் அமைந்த மிக உயரமான ஹூவர் அணை இந்தப் பொறியியல் முறைக்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாக நிலைபெற் றுள்ளது. ஸ்பெயினில் தோன்றிய அம் முறையின் சிறப்பை பிரெஞ்சுக்காரர்கள் 'பூரன்ஸ் அணை'யைக் கட்டி நன்கு எடுத்துச் காட்டினுர்கள். இவ்வாறு வேறு பல

நாடுகளிலும் பொறியியல் வல்லுநர் கண்ட அனுபவங்களை யெல்லாம் கொலராடோ ஆற்றின் தனிக் குணங்களுக்கேற்பத் துருவி மேற்கொண்டு ஹூவர் அணையைக் கட்டியிருக்கிறார்கள்.

## இந்தியக் கப்பல்கள்

இந்தியாவில் கடற்கரையின் நீளம் சுமார் மூவாயிரம் மைல். ஆண்டு ஒன்று வெளி நாட்டுக் கப்பல் வர்த்தகத்தின் மதிப்பு ஆயிரத்து ஐந்நூறு கோடி ரூபாய்.

சுதந்திர மடைவதற்கு முன், இந்தியக் கப்பல்கள் எடை அளவு ஒன்றேகால் லட்சம் டன். இப்பொழுது ஆறே முக்கால் லட்சம் டன்.

சென்ற ஆண்டில் இந்தியாவில் கட்டிய கப்பல்களின் எடை ஒரு லட்சம் டன்.

சுதந்திர மடைவதற்கு முன், கரையோர வர்த்தகத்தில் மூன்றில் ஒரு பங்குதான் இந்தியக் கப்பல்கள் வசமிருந்தன. இப்பொழுது கரையோர வர்த்தக முழுமையும் இந்தியக் கப்பல்களே நடத்துகின்றன. அன்றியும் ஐரோப்பா, அமெரிக்கா, ருஷ்யா, ஜப்பான், ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா முதலிய நாடுகளுக்கும் இந்தியக் கப்பல்கள் செல்லுகின்றன.

# குடியாட்சி முறை

ஆட்லி பிரபு

(முன்னாள் பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஆட்லி பிரபு 1953-ம் ஆண்டில், ரங்கூன் நகரில் 'குடியாட்சி' என்ற பொருள் பற்றி நிகழ்த்திய உரையின் சுருக்கம்.)

குடியாட்சி முறை என்ற பொருள் பற்றிப் பேச விரும்புகிறேன். சென்ற முப்பதாண்டுகளாக, நான் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கிறேன். பதின்மூன்று ஆண்டுகளாக சர்க்கார் கட்சியிலும் பதினேழு ஆண்டுகள் எதிர்க் கட்சியிலும் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. பிரதம மந்திரியாகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறேன். ஆகவே என் அனுபவங்களையே உங்களுக்கு கூற விரும்புகிறேன்.

பல நூல்களைப் படித்து பிரிட்டிஷ் அரசியல் திட்டத்தையும் முறையையும் தெரிந்து கொள்ளலாம். மக்கள் ஆட்சியில் பலவகையுண்டு. அவற்றில் ஒன்றுதான் எங்களுடைய பிரிட்டிஷ் குடியாட்சி. ஏட்டால் தெரிந்து கொண்ட மக்களாட்சி முறைகளைவிட அனுபவத்தால் அறிந்து எங்கள் நாட்டு ஆட்சி முறையை எடுத்துக் கூறுவதே நன்றெனக் கருதுகிறேன்.

ஜனநாயகத்திற்கு திட்டவட்டமான உருவம் கற்பிப்பதில் பயனில்லை. பல நூற்றுண்டுகளில் பெற்ற அனுபவத்தால் எங்கள் ஆட்சி முறை உருவாகியிருக்கிறது. அது சித்தாந்தக் கட்டுக்குள் அடங்கி நிற்கவில்லை;

143832 JL
O:2M1,N64KM N59.16.6.

மாறுதல்களை எற்றுக் கொள்ளத் தக்க முறையில் அமைந்திருக்கிறது.

மக்கள் விருப்பத்தைத் திறம்பட நிறைவேற்றுவதே குடியாட்சியின் லட்சியமாகும். ஜனநாயக உரிமையுள்ள இடத்தில்தான் குடியாட்சி இருக்கும். ஓர் சுதந்திர நாட்டில் மக்களாட்சி நடைபெற வேண்டும்; அந்த நாட்டில் சிறுபான்மை மக்களும்கூட தங்களுடைய கருத்தைத் தெரிவித்து நாட்டு நடப்பில் பங்கு பற்றும் உரிமையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இதைத்தான் அடிப்படை ஜனநாயக உரிமை என்கிறோம். ஆட்சி முறையில் குடியாட்சி முறைதான் சிக்கலானது. கடினமானது. உரிமை நாட்ட முள்ளவர் குடியாட்சி முறையைத் தான் விரும்புவார்கள்.

சிறுபான்மைக் குரலுக்கு மதிப்பு தருவதே ஜனநாயகப் பண்பு. குடியாட்சி முறையில் எதிர்க் கட்சிக்கு உரிமையுடன் இயங்க வாய்ப்பளித்தல் அவசியம். குடியாட்சி முறையில் எதிர்க்கட்சி இல்லாவிட்டால் அது ஊறுபட்ட குடியாட்சி முறைதான். அதை குடியாட்சி முறையல்ல என்றும் கூறலாம்.

சென்ற போர்க்காலத்தில் எங்கள் நாட்டில் ஓர் விந்தையான சிக்கல் தோன்றிற்று. நாட்டிலுள்ள முக்கியமான மூன்று அரசியல் கட்சிகளும் சேர்ந்து கூட்டு மந்திரி சபையை அமைத்தன. ஆனால் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியில்லாத நிலைமை ஏற்பட்டது. எங்கள் நாட்டுப் பாராளுமன்ற அமைப்பு முறையில் எதிர்க் கட்சிக்கு முக்கிய இடமுண்டு. எதிர்க் கட்சியில்லாமல் பிரிட்டிஷ் பாராளுமன்ற முறை சிறப்பாகச் செயலாற்ற முடியாது. ஆகவே, எங்கள் கூட்டாளிகளில் ஒருவரை, அவர் சர்க்கார் ஆதரவாளராக இருந்தும்கூட பாராளு

மன்றத்திலுள்ள மற்ற அங்கத்தினர்களுடன் சேர்ந்து எதிர்க்கட்சியில் அமரவும் வாக்களிக்கவும் ஏற்பாடு செய்தோம். நாட்டில் அரசியல் முறையைப்போல, எதிர்க்கட்சி ஒன்று அவசியம் என்பதைக் காட்டவே இதைக் கூற நேர்ந்தது.

## தேர்தலும் கட்சிகளும்

பாராளுமன்றத்தை மக்கள் பிரதிநிதிசபை என்று கூறுகிறோம். பிரதிநிதித்துவ முறை பல நிலைகளில் முன்னேறியிருக்கிறது. இன்று வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமையுண்டு. தர்க்க ரீதியாகப் பார்த்தால், இப்போதுள்ள பிரதிநிதித்துவ முறையிலும் குறைபாடுகள் உண்டு. சென்ற பொதுத் தேர்தலில், தொழிற்கட்சிக்கு, கன்ஸர்வேடிவ் கட்சியைவிட, அதிக வாக்குகள் கிடைத்தன. ஆயினும் கன்சர்வேடிவ் கட்சிக்கே அதிக ஸ்தானங்கள் கிடைத்தன. 1945-ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் தொழிற் கட்சிக்கு அதிக ஸ்தானங்கள் கிடைத்தது. நபர் வீதமாகப் பாராமல் கட்சி ரீதியில் பார்த்தால் எங்களுக்குக் கிடைத்த வாக்குகள் குறைவுதான்.

## கட்சி முறை

பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் சுயேச்சை அபேட்சகருக்கு முக்கிய இடமில்லை. மக்கள், தனி நபர்களைவிட கட்சிகளையே—கட்சி அபேட்சகர்களையே—ஆதரிக்கிறார்கள். மக்களுடைய பிரதிநிதி ஒருவர் பாராளுமன்றத்தில் இருக்கவேண்டும் என்பதற்காக, மக்கள் தங்களுடைய வாக்குரிமையைப் பயன்படுத்தவில்லை. பாராளுமன்றத்தில் கட்சிரீதியில் பணி நடப்பதால், தங்களுக்கு விருப்பமான ஒரு கட்சி அபேட்சகரை தங்களுடைய

பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கிருர்கள். கட்சிப் பிரதி கட்சிகள் இருந்தால்தான் ஜனநாயகம் தழைக்கும். கிரிக்கெட் முதலிய விளையாட்டுகளில் இரண்டு கட்சிகள் இருப்பதால்தான் நாம் அவற்றை ரசிக்கிறோம். கட்சியும் எதிர்க்கட்சியில்லாத விளையாட்டுகளை நாம் ரசிப்பதில்லை. வாழ்க்கையும் அப்படித்தான்.

சர்வாதிகார கட்சியுள்ள நாடுகளிலும் பொதுத் தேர்தல் நடைபெறுவதுண்டு. அங்கு தேர்தலில் போட்டியில்லை. எதிர்க்கட்சி இல்லை. தொகுதிக்கு ஓர் அபேட்சகர் நிற்பார். இந்தத் தேர்தல் முறையால் நன்மையில்லை என்பதே என் கருத்து. தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க மக்களுக்கு உரிமை வேண்டும். சுதந்திரமாகத் தேர்தல் நடைபெற வேண்டும். அந்தத் தேர்தலில் பெரும்பான்மை ஸ்தானங்களைப் பெற்ற கட்சி, அரசாங்கப் பொறுப்பை ஏற்கவேண்டும். தேர்தலில் பல கட்சிகள் போட்டியிடுவதை நான் விரும்பவில்லை. பல கட்சிகள் போட்டியிட்டால் எந்தக் கட்சிக்கும் அதிக ஸ்தானங்கள் பெறும் வாய்ப்பு கிடைக்காது. இதனுல் மந்திரிசபை அமைப்பதிலும் சிக்கலேற்படும். மக்களுடைய ஆதரவு பெற்ற பெருவாரிக் கட்சியின் மந்திரி சபைக்குப் பதிலாக கட்சிகளால் அமைக்கப்பட்ட மந்திரி சபையே ஏற்படும். சென்ற பல ஆண்டுகளாக எங்கள் நாட்டில் இம்மாதிரிச் சிக்கல் ஏற்படவில்லை. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஸ்தானங்களைப் பெற்ற கட்சியே நிர்வாகப் பொறுப்பை ஏற்கிறது. பிரிட்டிஷ் குடியாட்சி முறை தர்க்க ரீதியில் குறைபாடுகளுள்ளது என்ருலும் சிறப்பாகச் செயலாற்றுகிறது என்று கூறமுடியும்.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் காமன்ஸ் சபையும் பிரபுக்கள் சபையும் அடங்கியவை. காமன்ஸ் சபையே

அதிகார வல்லமையுள்ளது. பல ஆண்டுகளாகப் போரிட்டுப் பெற்ற உரிமை இது. வேறு நோக்கத்துடன் நிறுவப்பட்ட பிரபுக்கள் சபை, இன்றும் இருக்கிறது. இதில் 840 பேர்கள் அங்கம் வகிக்கிருர்கள். இவர்கள் அனைவரும் சபைக்கு வந்துவிட்டால் இருக்க இடமிராது. ஆனல் என்றுமே அனைவரும் வந்ததில்லை. சபைக்கு வராத அங்கத்தினர்களுள்ள தனிப் பெருமை பெற்ற சபை இது. பிரபுக்கள் சபைக்கு விசேஷ அதிகாரங்கள் இல்லை. ஒரு பிரச்னையை விவாதிக்கவும் ஒத்திவைக்கவும், உரிமையுள்ள சபை இது. காமன்ஸ் சபைக்குத் நிர்வாக உரிமை உண்டு. அங்கு கட்சி ரீதியில் அலுவல் நடை பெறுகிறது.

கட்சி அரசுமுறை தீமையானது என்று பலர் கூறி யுள்ளார்கள். கட்சி முறையில், ஒருவர், தாம் விரும்பிய முறையிலோ, கொள்கைக் கேற்றபடியோ வாக்களிக்க முடியாது. கட்சிக் கட்டுப்பாட்டுக்கு அடங்கியே வாக் களிக்கவேண்டும்—செயலாற்ற வேண்டும். ஆகவே இது விரும்பத்தக்கதல்ல என்பது அவர்களுடைய வாதம். ஆனல் நன்ருகச் சிந்தித்த பிறகே ஒரு பிரச்னை யைப் பற்றி முடிவு செய்ய வேண்டும் ஆனல் கட்சியைச் சேர்ந்த ஒருவர் ஒரு குறிப்பிட்ட பிரேரணையை ஏற்பதில் கருத்து வேற்றுமையுள்ளவராக யிருப்பதாக வைத் துக் கொள்வோம். பிரேரணையை நிராகரித்து அதன் மூலம் சர்க்காரைப் பலவீனப்படுத்துவது பெரிதா, அல் லது ஏற்றுக் கொண்டு சர்க்காரை ஆதரிப்பது பெரிதா என்று அவர் சிந்திக்க வேண்டும். பிரிட்டனில் மக்களு டைய—உறுப்பினர்களுடைய—கருத்தைப் பிரதிபலிக் கும் முறையில் கட்சிகள் பணியாற்றுவதால் இம்மாதிரிச் சிக்கல்களுக்கு இடமில்லை. காமன்ஸ் சபையில் கட்டுப் பாடான முறையில் எதிர்க் கட்சி பணியாற்றுவதால்,

அதற்கு (நிர்வாகப் பொறுப்பு கிடைக்கக் கூடிய) வாய்ப் பைத் தரும் முறையில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த அங் கத்தினர்கள் நடந்துகொள்ள மாட்டார்கள். எதிர்க்கட்சி யும் பொறுப்புடன் செயலாற்றும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் கட்சியில் முப்பதுபேர்களே இருந்தார்கள். ஓர் ஆண்டுக் கூட்டத் தில் சீர்திருத்தக் கருத்துள்ள பல தீர்மானங்களை நிறை வேற்றினோம். அப்போது எங்களுக்குப் பொறுப்புக் கிடையாது. எங்கள் சொல்லை நிறைவேற்றி வைக்கும் சந்தர்ப்பமில்லாத காலம் அது. ஆனால் பிறகு நிலைமை மாறிவிட்டது. ஆண்டுகள் செல்லச் செல்ல அனுபவம் பெறுவதால்—நிர்வாகத்தை ஏற்கும் நிலை வரும்போது—பொறுப்புணர்ச்சியும் ஏற்பட்டுவிடுகிறது. வாக்குறுதி களை நிறைவேற்றும் பொறுப்புணர்ச்சி இல்லாததால், வேறு நாடுகளிலுள்ள சிறந்த அரசியல் கட்சிகள், நிர் வாகத்தைக் கைப்பற்றும் வாய்ப்பை நழுவி நிற்கும் அவலநிலையைப் பார்த்திருக்கிறேன். அந்தக் கட்சி களுக்கு பொறுப்பு உணர்ச்சி ஏற்படாது. சந்தர்ப்ப வசத் தால் பதவிக்கு வந்தாலும் அவற்றுக்கு திறமையுடன் ஆட்சி செலுத்தத் தெரியாது.

பாராளுமன்றத்தில் கேள்வி நேரம்

அரசாங்கம் சிறப்புறச் செயலாற்றுவதற்கு, பாராளு மன்றத்தில் எதிர்க் கட்சியிருப்பது அவசியம். ஆளுங் கட்சி எதிர்க்கட்சியைப் புறக்கணிக்காமல் நல்ல முறை யில்—சகிப்புத்தன்மையுடன்—பழகவேண்டும். பாராளு மன்ற நடவடிக்கைகளில் மிகவும் முக்கியமான நிகழ்ச்சி கேள்வி நேரமாகும். மக்களுடைய முறையீடுகளைக் கவனிக்கவும், அதிகாரிகளுடைய நடத்தையை ஒழுங்கு படுத்தவும், இந்த நிகழ்ச்சி உதவுகிறது. வாரத்தில்

நான்கு நாட்களில், நாளுக்கு ஒரு மணி நேரம், கேள்விகளுக்கு விடையளிக்க ஒதுக்கப் பெறுகிறது. பாராளுமன்றத்தில் மந்திரிகளே கேள்விகளுக்கு விடைகூற வேண்டும். கேள்வி நேரத்தில் விறுவிறுப்பு இருக்கும்; நகைச்சுவையும் இருக்கும்.

பல நாடுகளில் அதிகாரிகள் ஆட்சி நடப்பதைப் பார்க்கிறோம். அதிகாரிகள் திறமையுடன் நாட்டை நிர்வகிக்கலாம். அந்த ஆட்சியை மக்கள் கருத்துக்கிசைந்த ஆட்சி எனக் கூற முடியாது, "மந்திரிகளால் என்ன பயன்? அதிகாரிகளைப்போல ஆளுந்திறமை அவர்களுக்கு உண்டா" என்று பிரபல பிரிட்டிஷ் அரசியல்வாதி ஒருவரிடம் கேட்டபோது, அவர் பின்வருமாறு கூறினர்; "மக்கள் எதை விரும்பமாட்டார்கள் என்பதை அதிகாரிகளுக்கு எடுத்துக்கூறவே மந்திரிகள் இருக்கிரார்கள்." கேள்வி நேரத்தில் மக்கள் குரலைக் கேட்க முடிகிறது. அது நிர்வாகத்திலிருப்தோரை ஒழுங்குப் பாதையில் திருப்பிவிடப் பயன்படுகிறது.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் கூட்டுறவுடன் பணியாற்றுகின்றன. நான் எதிர்க்கட்சித் தலைவனாகப் பணியாற்றுவதால், எழுத்து மூலம் கேள்விகளைக் கேட்க முடியாது. ஆயினும் ஒரு சிக்கலுக்கு விடைகாணவோ, ஐயப்பாட்டைத் தீர்த்துக் கொள்ளவோ தனிக் குறிப்பு அனுப்பலாம்.

கேள்வி நேரத்தில், சபையில் விறுவிறுப்புக் காணப்படும். முக்கியமான ஓர் நிகழ்ச்சியைப்பற்றி கேள்வி கேட்கும் அங்கத்தினர் அது பற்றி விரிவான முறையில் விவாதிக்க வேண்டும் என்று சபாநாயகரிடம் கோருவார். விவாதத்திற்கு நேரம் ஒதுக்குவதும் மறுப்பதும் சபாநாயகருடைய விருப்பமாகும். அன்ருெரு நாள்

ஆப்பிரிக்கக் குடியேற்றநாடுகளைப் பற்றி கேள்விகளைக் கேட்க நேர்ந்தபோது, தனியாக நேரம் ஒதுக்கி விவாதிக்க வேண்டும் என்று சபாநாயகரைக் கேட்டுக் கொண்டோம். சபாநாயகரும் இசைந்தார்.

குடியாட்சியில் அரசாங்கத்தார், தன்னிச்சையாகச் செயலாற்ற முடியாது. நிர்வாகத் துறையைப் பற்றி விவாதிக்க 24 நாட்கள் ஒதுக்கப் பெறுகின்றன. இன்ன துறைகளைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்று கூறும் உரிமை எதிர்க்கட்சியைச் சேர்ந்தது. எதிர்க் கட்சி உறுப்பினர்கள் தனியாகக் கூடி இன்ன இன்ன பொருள் பற்றி விவாதிக்க வேண்டும் என்று முடிவு கட்டிக்கொண்டு, அரசாங்கத்தாருக்கு தெரிவிப்பார்கள். இந்த நாட்களில் மந்திரிகள், கடுமையான விமர்சனத்துக்கு ஆளாக நேரிடும்.

ஒவ்வொரு நாளும், நடவடிக்கையின் இறுதியில் முக்கியமான பிரச்னைகளைக் குறிப்பிட அரைமணி நேரம் ஒதுக்கப் பெறும். இந்தச் சமயத்திலும் மந்திரிகள் சபையிலிருந்து பதில் கூறுவது அவசியமாகும். பாராளுமன்றம் இரவில் கூடுவதால், சில நாட்களில் பொழுது புலரும் வரையில் விவாதம் நடைபெறும். மந்திரிகள் காத்திருந்து விடைகூறிச் செல்வார்கள். சில நாட்களில் தனிப்பட்ட உறுப்பினர்களுக்காக நேரம் ஒதுக்கப் பெறும். இவற்றிலிருந்து பாராளுமன்றத்தில் மந்திரிகளுக்குள்ள கடமைகளைத் தெரிந்து கொண்டிருப்பீர்கள்.

நிகழ்ச்சி முறை

ஒவ்வொரு பருவக்கூட்டத்திலும், அரசி, அரசாங்கக் கொள்கையை விவரித்துத் தொடக்க உரை நிகழ்த்துவது வழக்கம். முன்னாட்களில் தொடக்க உரை மிகவும்

விரிவாக இருக்கும். அரசாங்கத்தார் பாராளுமன்றத்தில் பல மசோதாக்களைக் கொண்டுவருகிறார்கள். ஜூன் அல்லது ஜுலை மாதத்தில் இவைபற்றித் தொடர்ந்து செயலாற்ற விரும்பவில்லை என்று பிரதம மந்திரி கூறுவார். ஆனால் தொழிற்கட்சி பதவியிலிருந்தபோது, செய்ய விரும்பியதை மட்டுமே, மன்னர்பிரான் உரையில் குறிப்பிட்டோம். எங்கள் திட்டப்படி செயலாற்றினோம் என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறேன். கட்சி உறுப்பினர்கள் கட்டுப்பாடுடன் செயலாற்றியதால்தான் இது சாத்தியமாயிற்று.

காமன்ஸ் சபையில் நல்லிணக்கமிருந்தால் ஒரு குறிப்பிட்ட மசோதாவை நன்கு விவாதித்து நிறைவேற்றிவிட முடியும். எதிர்க்கட்சியினர் விரும்பா விட்டால், அவர்கள் வாதத்தை நீடித்து காலங்கடத்தமுடியும். அப்போது, காலவரம்பிட்டு, காலத்தைச் சுருக்கிவிட முடியும்; காமன்ஸ் சபையில் அயர்லாந்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் இருந்த வரையில் ஒவ்வொரு நிலையிலும் அவர்கள் தவக்க சாகஸம் காட்டி வந்தார்கள். இப்போது எதிர்க்கட்சியும் ஆளுங்கட்சியும் நல்லுறவுடன் பணியாற்றி வருகின்றன.

கூட்டுறவு

உள்நாட்டு விவகாரங்களில்தான் அரசியல் கட்சிகளுக்குள் வேற்றுமையுண்டு. தொழிற்கட்சி பதவியேற்றபோது, பொதுவாக எதிர்க் கட்சியின் கூட்டுறவைப் பெற்று செயலாற்றியது என்றே கூறலாம். போர்க்காலத்திலிருந்த கூட்டு மந்திரி சபையில் நான் பணியாற்றினேன். அப்போது பொது இன்ஷ்யூரன்ஸ், தேசீய சுகாதாரப் பணி போன்ற பல திட்டங்களை இருசாராரும் ஏற்றுக்கொண்டோம். தொழிற்கட்சி பதவி

யேற்றபோது, இவற்றை - கொள்கையளவில் எதிர்க் கட்சி ஏற்றுக்கொண்டிருப்பதால் -அமல் நடத்துவதில் எதிர்ப்பில்லை. ஆனால் சில தொழில்களை பொதுத் துறைக்குக் கொண்டுவர முயன்றபோதுதான் எதிர்ப்பு ஏற்பட்டது

பொதுவாக ஒரு மந்திரிசபை, முந்திய அரசாங்கத் தாரின் பணியை மாற்றி அமைக்க முயலுவதில்லை. ஆனால், இப்போது நாங்கள் பொதுத்துறையில் கொண்டு வந்த சில தொழில்களை மீண்டும் தனியார் துறைக்கு மாற்றியிருக்கிறார்கள். இது வழக்கத்திற்கு மாறான நிகழ்ச்சிதான். வெளிநாட்டு உறவில், அவ்வப்போது கருத்துவேற்றுமை எழுந்தாலும் ஆளுங்கட்சியும் எதிர்க் கட்சியும் இணக்கமான முறையில் பிரச்னையைச் சிந்திப் பது வழக்கம். உதாரணமாக, இப்போது நான் எதிர்க் கட்சித் தலைவனாக இருக்கிறேன். ஒரு குறிப்பிட்ட நாட் டுக்கும் பிரிட்டனுக்கும் உள்ள உறவில் சிக்கலேற்படு கிறது. அரசாங்கத்தார் எடுத்துக் கொண்டுள்ள நட வடிக்கையை விமர்சிக்க விரும்புகிறேன். ஆனால் நான் உடனே நடவடிக்கை எடுத்துக் கொள்ள மாட்டேன். "இந்தப் பிரச்னையைப் பற்றி இன்று கேள்வி கேட்க விரும்புகிறேன்; அரசாங்கத்தாருக்கு அசௌகரியமாக யிருந்தால், சில தினங்களுக்குப் பிறகு இந்தக் கேள்வி யைக் கேட்கிறேன்" என்று அவர்களுக்கு குறிப்பு அனுப்புவேன். "சில தினங்கள் காத்திருந்தால் சௌகரி யமாக யிருக்கும்" என்று அவர்கள் பதிலனுப்பினால்தான் நான் காத்திருப்பேன். நாங்கள் பதவியிலிருந்தபோதும், எதிர்க்கட்சியினர் இதேபோல எங்களுடன் இணங்கிப் பணியாற்றினார்கள். குடியாட்சி முறையில் அரசியல் கட்சிகள் சகிப்புத்தன்மையுடனும், கூட்டுறவுடனும் பழகுவது அவசியமாகும்.

தனி வாழ்க்கையில் நாங்கள் கட்சி வேற்றுமைகளை மறந்துவிட்டுப் பழகுகிறோம். எனக்கு எதிர்க்கட்சியில் பல நண்பர்கள் உண்டு. இதனால் நன்மையுண்டு என்றே நான் கருதுகிறேன். எதிர்க்கட்சியினருடன் பழகுவதால் நாம் மனம் மாறி அவர்களுடன் சேர்ந்துவிடக்கூடும் என்று சிலர் ஐயப்படுகிறார்கள். இதே வாதம் எதிர்க் கட்சியினருக்கும் பொருந்துமல்லவா? நாம் அவர்களை நம் பக்கம் ஈர்த்துக்கொள்ள முடியாதா? இதில் ஓரள வுக்கு உண்மை இல்லாமல் இல்லை. நான் முப்பது ஆண்டுகளாக பாராளுமன்றத்தில் இருக்கிறேன். என் கருத்துக்களைப் பல ஆண்டுகளுக்கு முன்பு ஒதுக்கிய எதிர்க்கட்சியினர் இப்போது ஏற்றுக்கொள்கிறார்கள். காலப் போக்கும் நெருங்கிய பழக்கமும்தான் இந்த மாறுதலுக்குக் காரணம் என்று எண்ணுகிறேன்.

அரசாங்க ஊழியர்கள்

குடியாட்சி முறையில், அரசாங்க ஊழியர்கள் நேர் மையுடன் கடமையாற்றுவது அவசியம். தொழிற்கட்சி ஆட்சி நடந்தபோது அமைச்சுகளிலிருந்த அதிகாரிகள் எங்கள் விருப்பப்படி, இரும்பு—எஃகு தொழில்களையும் போக்குவரத்துத் தொழிலையும் பொதுத் துறையில் கொண்டுவருவதற்கான மசோதாக்களைத் தயாரித்தார் கள். கன்ஸர்வேடிவ் கட்சி பதவிக்கு வந்தபோது அதே அதிகாரிகள் அவற்றை மீண்டும் தனியார் துறைக்கு மாற்றுவதற்கான மசோதாக்களைத் தயாரிக்க உதவினார் கள். எந்தக் கட்சி பதவிக்கு வந்தாலும், அதிகாரிகளு டைய மனப்பூர்வமான ஆதரவைப் பெறுகிறது.

1945-ஆம் ஆண்டில் நடந்ததோர் நிகழ்ச்சியைக் கூற விரும்புகிறேன். பிரதம மந்திரி சர்ச்சிலுடன் (எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில்) நானும் பாட்ஸ் டாமுக்குச் சென்றேன். இடையில் நடந்த பொதுத்

தேர்தலால் நிலைமை மாறிற்று. நான் திரும்பும்போது பிரதம மந்திரியாகத் திரும்பினேன். சர்ச்சிலுக்கு அந்த ரங்கக் காரியதரிசியாகப் பணியாற்றிய அதிகாரியே எனக்கும் பணியாற்றினர். இதைக்கண்டு எங்களுடைய அமெரிக்க நண்பர்கள் சிலர் வியப்படைந்தார்கள். கட்சி வேற்றுமைக்கு முதலிடம் கொடுத்துச் சிந்தித்தால் வியப்புத்தான் ஏற்படும். ஆனால் எங்களுடைய நாட்டின் நிலைமை வேறு. சிவில் சர்வீஸ் ஊழியர்கள் திறன்மிக்க நிர்வாகிகள். மந்திரிசபை மாறும்போதெல்லாம், அவர்களையும் மாற்றினால் நிர்வாகம் சீர்கெட்டுவிடும் என்பது என் கருத்து. மேலும் குடியாட்சி முறையில், நிர்வாக அமைப்பை-அதிகாரிகளை-நம்பித்தான் ஆட்சியாளர்கள் செயலாற்றவேண்டும்.

எங்களுடைய பாராளுமன்றஅமைப்பு, மாறுதல்களை ஏற்றுக்கொள்ளக் கூடியது என்று கூறினேன். ஒரு சில தலைவர்களைக் கொண்ட சபையாக அது தொடங்கிற்று. பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் சபைக்கு வந்தார்கள். பல ஆண்டுகளுக்குப் பிறகு, வாக்காளர் பட்டியலும் விரிந்தது. சபையில் தேர்ந்தெடுக்கப்பட்டோர் எண்ணிக்கையும் பெருகிற்று. இன்று வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமையுண்டு. மந்திரிகள் மக்களுடைய பிரதிநிதிகளாக, நாட்டையாளுகிறார்கள். காலத்திற்கேற்றபடி அரசியல் சிந்தனைக்கேற்றபடி, பாராளுமன்றமும் வளர்ச்சி—மாறுதலை—யடைந்துவருகிறது; எதிர்காலத்தில் பல மாறுதல்கள் ஏற்படக்கூடும். இது ஏன்? ஜனநாயகத் திட்டம் ஏட்டிலேறிய திட்டமல்ல. மக்களுடைய கருத்திலூறிய திட்டமாகும். ஆகவே அரசியல் சிந்தனைக்கேற்றபடி அதுவும் மாறுதல்களைப் பெற்றுள்ளது.

பிறநாட்டார் ஏட்டிலெழுதிய திட்டவட்டமான அரசியல் திட்டத்தை விரும்பலாம். ஆனால் நாங்கள், எங்கள் நாட்டு குடியாட்சி முறையைத்தான் பெரிதும் விரும்புகிறோம். அதனால் கிடைத்த நன்மைகள் பல. ஜனநாயகத்தை ஏட்டில் சிறைப்படுத்த நாங்கள் விரும்பவில்லை; ஜனநாயகப் பண்பைப் பேணவே விரும்புகிறோம். குடியாட்சிமுறை, நாட்டுக்கேற்றபடி காலத்துக்கு ஏற்றபடி அமையும் தன்மையுடையது. மக்கள், தங்களுடைய தேவைக்கேற்ற முறையில் அரசை அமைத்துக் கொள்கிறார்கள்.

குடியாட்சி முறையில் அரசுக்கு எல்லையற்ற அதிகாரங்களை வழங்குவதிலும் அபாயமுண்டு. ஆட்சித் திறனற்ற அரசாலும் தீங்கு விளையும். ஆகவே, சுதந்திரத்திலும் ஜனநாயகத்திலும் நம்பிக்கையுள்ளவர்கள், சமநிலையில் நின்று செயலாற்றும் அரசை அமைத்தல் வேண்டும். அந்த அரசு வன்மைமிக்கதாகயிராமல், மக்களுடைய தேவையறிந்து செயலாற்றும் திறன்மிக்க அரசாக இருத்தல் வேண்டும்.

## குருடர்கள்

உலகத்திலேயே குருடர்கள் அதிகமாக உள்ள நாடுகளில் இரண்டாவது இந்தியா. பெல்ஜியத்தில் ஒரு லட்சம் பேரில் 43 பேர் கண்ணிழந்தவர்; இத்தாலியில் அந்த விகிதாசாரம் 57; பிரான்ஸில் 101; அமெரிக்காவில் 175: இங்கிலாந்தில் 175; இந்தியாவில் 500.

# தழை உர உபயோகம்

வழக்கமான முறையில் சாகுபடிப் பருவ வேலை களைத் தடைப்படுத்தாதபடி எங்கெங்கெல்லாம் தழை உரம் உற்பத்தி செய்ய முடியுமோ, உபயோகிக்க முடியுமோ அத்தகைய சகல சாகுபடிப் பிரதேசங்களிலும் தழை உரத்தை வெற்றிகரமாக உபயோகிக்கலாம். உலகத்திலுள்ள எல்லா நாடுகளையும் விட இந்தியாவில் தான் தழை உரம் போடுவதற்கு ஏராளமான வாய்ப்பு இருக்கிறது. ஏனென்றால், இந்தியா உஷ்ண மண்டலப் பிரதேசத்தில் உள்ளது; பயிர்கள் வளர்வதற்கு நீண்ட அவகாசம் கிடைக்கிறது; ஆள் பல வசதியும் அதிகம் இருக்கிறது. எனவே, மற்ற நாடுகளைவிட இந்தியா வுக்கு நிச்சயமாய் சாதகமான நிலை இருக்கிறது. பூமியில் நைட்ரஜன் சத்தும், மக்கு சத்தும் (ஹியூமஸ்) பொது வாய்க் குறைவாக இருப்பதைப் பெருமளவுக்கு ஈடு செய்துவிட இந்த இயற்கையான வசதிகளைத் திறமை யுடன் பயன்படுத்திக் கொள்ளலாம்.

சாதாரண விவசாயி எழுதப்படிக்கத் தெரியாதவர்; எளியவர்; அதனால் உரம்போடுகிற முறையில் சுலபமான, செலவு அதிகமில்லாத ஒரு முறையைப் பின்பற்றவேண் டும். இதற்கு ஒரே வழி தழை உரம் போடுவதுதான்; ஆனால் இதர பயிர்களுக்குப் பாதகமில்லாத முறையில் இதைச் செய்ய முடிந்தால்தான் நல்லது. அவ்வாறு அமைந்தால், விவசாயி தம் முயற்சியால் தம் வயலிலேயே உரப் பயிரை வளர்த்துக்கொள்ளலாம். சென்ற சில

ஆண்டுகளாக ஒரு புதிய முறை உருவாக்கப்பெற்றிருக்கிறது; தழை உரத்தைத் துரிதமாக அபிவிருத்தி செய்வதில் இதுவரை இருந்துவந்த கஷ்டங்களைச் சமாளிப்பதற்கு அது வழி செய்கிறது; இந்த முறையைப் பல் வேறு ராஜ்யங்களில் வெற்றிகரமாகக் கையாண்டிருக்கின்றனர். எனவே, தழை உரம் போடும் முறையை உடனடியாக விஸ்தரிப்பதற்கு நல்ல தோது இருக்கிறது.

இந்தப் புதிய முறையின் முக்கிய அம்சம் என்ன வென்றால், எந்த விவசாயிக்குத் தழை உரம் தேவைப் படுகிறதோ அவர் தழை உர விதையைப் போதிய அளவில் விளைவித்துக் கொள்ளுவதுதான். அதனால் இப் போது சாகுபடி செய்கிற பயிர் மாசூல் பாதிக்கப்படக் கூடாது என்பது முக்கியம். பரம்பரையாய் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தழை உரத்தை உபயோகிப்பது சம்பந்தமாய் அதிகத் தூண்டுதல் அவசியமில்லை; ஆனால், தம் பயிருக்கு வேண்டிய தழை உரத்தை எப்படித் தயாரிப்பது, அதற்கான விதைகளை எப்படி உற்பத்தி செய்வது என்கிற பிரச்னைக்கு நடைமுறை சாத்தியமான வழியைத் தெரிவித்தால் போதும். இதற்கு உதாரணமாக தஞ்சாவூர் ஜில்லாவைச் சொல்லலாம். அங்கே தழை உர உபயோகம் வெகுவாகப் பரவியிருக்கிறது. முன்பு எத்தனையோ வருஷங்களாய்த் தழை உர சாகுபடி விஸ்தீரணம் ஒன்றரை லட்சம் ஏகராவாக இருந்தது. ஆனால், 1952—53-ஆம் ஆண்டு முதல் புதிய வேலை முறை கையாளப்பெற்றபின், பயிர் சாகுபடியாகிற மொத்த விஸ்தீரணமான 10 லட்சம் ஏகராவிலும் தழை உரம் பயிராகிவிட்டது. 1951-52-ஆம் ஆண்டில் 4 மணங்குக்குக் குறைவாய் ஸெஸ்போனியா ஸ்பீஸியோசா விதையை உபயோகித்தனர். இது புதிய வெளிநாட்டு ரகம். தஞ்சாவூர் ஜில்லாவில் தழை உரம் சாகுபடியான

பிரதேச விஸ்தீரணம் பெருகி வந்த விவரத்தைப் பார்க்கலாம் : 1950- 51ஆம் ஆண்டில் 46,325 ஏகரா; 1953-54-ஆம் ஆண்டில் 3,16,920 ஏகரா; 1956-57-ஆம் ஆண்டில் 10,45,000 ஏகரா.

இதேபோல் ஒரிஸ்ஸாவிலும் 1957-ம் வேலைமுறை தொடங்கிற்று. அதன் பயனாய் தழை உரம் பயிர் விஸ்தீரணம் 1957-ஆம் ஆண்டில் சுமார் 10,000 ஏராவாக இருந்தது. 1958-ஆம் ஆண்டில் ஒரு லட்சம் ஏகராவாக அதிகரித்தது. 1959-ஆம் ஆண்டில் அது 10 லட்சம் ஏகராவுக்குப் பரவிவிடுமென்று நிச்சயமாய்த் தெரிகிறது. தஞ்சாவூரைப் போலல்லாமல் ஒரிஸ்ஸாவில் தழை உர உபயோகத்தில் நீண்ட காலம் பழக்கமில்லை. எனவே, ஒரிஸ்ஸா உதாரணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. பீகாரில் 1956-ஆம் ஆண்டில் தழை உரம் போடப்பட்ட விஸ்தீரணம் சுமார் ஒரு லட்சம் ஏகரா. 1959-ஆம் ஆண்டில் தழை உரம் போடப்படுகிற விஸ்தீரணம் 8 லட்சம் ஏகராவுக்கு அதிகமாகிவிடும்.

பீகாரில் 1958-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பரிசோதனைகளின் பயனாய், தழை உர விதைகளைத் துரிதமாக அபிவிருத்தி செய்ய முடியும் என்பது நிரூபணமாகிவிட்டது. இதேபோல், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகியவைகளில் நடந்த பரிசோதனைகளும் உற்சாகமூட்டும் பலன்களைத் தந்துள்ளன. ஓர் ஏகரா நெல் வயல் வரப்பில் 2½ மணங்கு தயிஞ்சா விதையை உற்பத்தி செய்துவிடலாம். அதைக்கொண்டு அடுத்தப் பருவத்தில் 8 ஏகரா நிலத்துக்குத் தழை உரம் போடலாம். ஓர் ஏகரா வயல் வரப்பில் ஓர் அடி விட்டுவிட்டு இந்தப் பயிரை வளர்க்க ஓர் அவுன்ஸ் விதை போதும்.

ஒவ்வொரு ராஜ்யத்திலும் விவசாய இலாகா தழை உர உபயோகத்தை வற்புறுத்தி வந்திருக்கிறது. ஆனால்

விதைத் தட்டுப்பாடு காரணமாய் அதைக் கையாள்வதில் சிரமம் ஏற்படுகிறது. புதிய வேலை முறைப்படி, அதாவது ஆரம்ப விதை தயாரிக்க ஒரு விவசாயிக்கு அரை அணுவுக்கு அதிகமாய்ச் செலவில்லாத இந்த வேலை முறைப்படி, நடவடிக்கை எடுத்தால் நாடு முழுவதும் எங்கெல்லாம் தழை உரம் போட முடியுமோ அங்கெல்லாம் தேவைப்படுகிற விதையை மூன்று பருவத்துக்கும் தயாரித்துவிடலாம். உதாரணமாக, ஒரு ராஜ்யம் முதலில் ஆயிரம் மணங்கு தழை உர விதைகளை உபயோகிக்கத் தொடங்கினால், ஏகரா ஒன்றுக்கு ஓர் அவுன்ஸ்சுக்குப் பதிலாக இரண்டு அவுன்ஸ் வீதம் உபயோகித்து, வரப்பு ஓரத்தில் விதைத்து சுமார் ஆறு லட்சம் ஏகராவுக்கு அதிகமாய்ப் பயிரிட்டுவிடலாம்; பீகாரில் கிடைத்தப் பலனைப்போல், ஐந்தில் ஒரு பங்கு பலன் கிடைத்தால் கூட ஒரு பருவ இறுதியில் பத்து லட்சம் ஏகராவுக்கு மேல் தழை உரம் போடுவதற்கான விதைகள் கிடைத்து விடும். அடுத்த பருவத்தில் எண்பது லட்சம் ஏகராவில் வரப்பு ஓரத்தில் தழை உரம் பயிர் செய்வதற்கு அந்த விதைபோதும். அதன் மூலம் உற்பத்தியாகிற விதையைக் கொண்டு பெரும்பாலான ராஜ்யங்களில் முழு விஸ்தீரணத்துக்கும் உபயோகிக்கலாம். ஆனால், உண்மையான முன்னேற்றம் எப்படி இருக்கிறது என்பது விஸ்தரிப்பு சிப்பந்திகள், கிராமப் பஞ்சாயத்துக்கள், சங்கங்கள், உத்தியோகப் பற்றற்ற பிரியர்கள் ஆகியோர் உதவியுடன் இந்த வேலை முறையை சாதாரண விவசாயிகட்கு எவ்வளவு சீக்கிரம் பரப்புகிறார்கள் என்பதைப் பொறுத்தது.

நெல், கோதுமை, உருளைக்கிழங்கு, கரும்பு, மக்காச் சோளம் பாசன ரீதியில் பயிராகிற தினை, சாமை வகை

யரு தானியங்கள், தோட்டப் பயிர்கள், தென்னை, பழ மரங்கள் ஆகியவைகளுக்கு தழை உரம் போடலாம். நெல்லானது, நாற்று நடவு முறை அல்லது விதைப்பு முறையில் பயிராகிறது. நாற்று முறைப்படி சாகுபடி யாகிற நெல் விஷயத்தில் நாற்றங்கால் வேலை பருவ மழை ஆரம்பிக்கும்போது தயாராகும்; அல்லது பாசனத் தண்ணீர் கிடைக்கும்போது ஆரம்பமாகும். குறுகிய காலப் பயிர்களைத் தவிர, மற்றபடி நாற்றுக்கள் வளர ஐந்தாறு வாரங்கள் பிடிக்கும். இந்த இடைக் காலத்தில் ஏகரா ஒன்றுக்கு பத்தாயிரம் மணங்குவரை தழை உரத்தைத் தயாரித்துவிடலாம். நாற்றைப் பிடுங்கி நடுவதற்கு முன் அது கிடைத்துவிடும். தூவி விதைக்கும் நெற் பயிர் விஷயத்தில் நெல்லோடுகூடச் சேர்ந்த தழை உரமும் பயிராகும். பிறகு தழை உரப் பயிர் பிடுங்கிபோடப் பெற்று நன்ருக மிதிக்கப்பெறும். ஒரு வாரத்துக்குப் பின் இந்த வேலை நடக்கும். விசேஷப் பிரச்னைகள் உள்ள பிரதேசத்தில் அதாவது தண்ணீரில் அமிழ்ந்து நிற்கும் நெற்பயிர் பிரதேசம், தண்ணீர் இல்லாமல் சாகுபடியா கிற பிரதேசம் முதலியவை விஷயத்திலும் தழை உரம் போடும் முறையை விஸ்தரிப்பதில் சங்கடம் இருக்காது.

கோதுமை, பார்லி சாகுபடிப் பிரதேசத்தில் பெரும் பகுதிக்குத் தழை உர முறையை விஸ்தரிப்பதற்கு நல்ல தோது இருக்கிறது. ரபி தானியப் பயிர் பாசன வசதி யுடன் செய்யப்படுவதாய் இருந்தால், மக்காச்சோளம், பருத்தி அல்லது நெல் போன்ற கரிப் பயிர் ஒன்று அதே வயலில் சாகுபடி செய்யப்படும். பருத்தி இலைகள் கோதுமைக்குத் தழை உரமாக விளங்கும். பாசன வசதி யுள்ள பருத்திக்கு ரசாயன உரங்கள் போடலாம். கோது மைக்கு முன் மக்காச் சோளம் பயிரானல், தழை உரத்தை இடைப் பயிராக வளர்க்க வேண்டும். அதற்கு மெள்ள

வளருகிற ரகச் செடி உதாரணமாக ஈஸ்கினேமினே அமெரிக்ானு ஏற்றது. அது திடமான பயிர். பருவ மழைகளைத் தாங்கி நிற்கும் சக்தியுள்ளது. அது மக்காச் சோளப் பயிரைப் பாதிக்காது. கோதுமைக்கு மூன் நெல் சாகுபடியானல், வரப்பு ஓரத்தில் இரண்டு அங்குல இடை வெளி விட்டு ஸெஸ்பேனியா ஸ்பீஸியோசாவைப் பயிராக்கலாம். அதன் மூலம் மூவாயிரம் பவுண்டு தழை உரம் கிடைக்கும். கரிப் பருவத்தில் கோதுமை வயல் தரிசாக விடப்பட்டிருந்தால்—உத்தரப் பிரதேசத்தில் மாத்திரம் 100 லட்சம் ஏகரா இவ்வாறு உள்ளது—அங்கே தழை உரப் பயிரை வளர்த்து ஆகஸ்டு மத்திக்குள் மடக்கி உழுதுவிடலாம். ரபி பயிர் சாகுபடியாகிற கனமான கரிசல் மண் பூமிகளில் தழை உரத்தைப் போட்டுச் சேர்ப்பது கஷ்டமாக இருக்கலாம். இதற்கு நிவாரணம், வரப்பு ஓரங்களில் நீண்ட காலம் வளருகிற தழை உரச் செடிகளை வளர்ப்பதுதான். அந்தத் தழைகளைக் குப்பை உரமாக மாற்றிக் கொள்ளலாம்.

இதர பயிர்கள் விஷயத்தில் மாறி மாறி பயிர்களைச் சாகுபடி செய்வதன் மூலம் தழை உரம் தயாரிக்கலாம். பிரதான பயிர் சாகுபடிக்கு முன்னதாக அல்லது அதோடு கூடவே, தழை உரப் பயிரும் விளையும்படி பார்த்துக் கொள்ளலாம். உதாரணமாக கரும்பு விஷயத்தில் இவ்வாறு செய்கிறார்கள்.

தேசத்தில், நெல் பயிராகும் விஸ்தீரணம் சுமார் எட்டுக்கோடி ஏகரா; கோதுமையும், பார்லியும் நாலு கோடி ஏகராவுக்கு மேல் உள்ள விஸ்தீரணத்தில் பயிராகின்றன. இந்தப் பிரதான தானியப் பிரதேசங்களில் மூன்றில் ஒரு பங்கு நீர்ப்பாசன வசதியுள்ளது. தழை உரம் போடக்கூடிய தோதுள்ள பல வகைப்பட்ட இதர பயிர்கள் விஷயத்தில் விஸ்தீரணம் சுமார் ஒன்றரைக்

கோடி ஏகராவாக இருக்கும். எனவே, மொத்தம் பதின் மூன்றரைக்கோடி ஏகராவில் தழை உரம் போடலாம். இதை மூன்று அல்லது நான்கு வருஷங்களில் செய்து விடலாம்; ஆனால், கள ஊழியர்கள் சாகுபடியாளர்களி டையே இது விஷயமாய் விசேஷ உற்சாகத்தை ஏற் படுத்த வேண்டும். விவசாயிகளின் அக்கறைக் குறைவு விசேஷப் பிரச்னைகள் ஆகியவைகளுக்கு இடம் வைத் துக் கொண்டால்கூட சுமார் ஏழு வருஷ காலத்தில் பத்துக்கோடி ஏகராவில் தழை உரம் போடவேண்டு மென்று அளவு நிர்ணயித்துக் கொள்ளலாம்.

இந்த லட்சிய அளவை நிறைவேற்றுவது அவ் வளவு ஒன்றும் கஷ்டமான காரியமல்ல. அதற்கு வேண் டிய முயற்சி செய்தால் போதும். பண விஷயத்தைக் கவனித்தால், பத்துக்கோடி ஏகராவுக்கு வேண்டிய தழை உரத்தின் விலை மதிப்பு ஆண்டொன்றுக்கு நூற்றைம் பது கோடி ரூபாய்க்கு அதிகமாக இருக்கும். அதிகப்படி யாய்க் கிடைக்கிற விவசாய உற்பத்தி விலை மதிப்பு ஆண் டொன்றுக்கு முந்நூறுகோடி ரூபாய்க்குக் குறையாது; சுமார் ஐந்து வருஷ காலத்தில் அது ஆண்டொன்றுக்கு ஆயிரம்கோடி ரூபாயாகவும் பெருகிவிடலாம். இந்த ஒரு சுலபமான முறையை ஒருமுகப்பட்ட ரீதியில் கையாண்டு விவசாய உற்பத்தியை இவ்வவவு அமோகமாகப்பெருக்கி விடலாம் என்பதைக் கவனிக்கும்போது அந்த லட்சிய அளவை அடுத்தச் சில வருஷத்திற்குள் பூர்த்தி செய்து விட நமக்கு ஊக்கம் ஏற்பட வேண்டும்.

# பொன் மயில்

---

சாக்யன்

மன்னன் பிரம்மதத்தன் காசிநகரை ஆண்ட காலத்தில், போதிசத்தன் ஒரு சொர்ண மயிலாய்ப் பிறந்தான்.

அது மகா லாவண்யம் வாய்ந்த மயில். தோகை விரித்து ஆடும்போது, தங்கமும் பச்சையும் மின்ன, அதன் ஆயிரம் ஊதாக் கண்களும் மலர்ந்து சிரிக்கும். தன் லாவண்யத்தைக் கண்டு, வேடன் அம்பு எந்த நேரத்திலே தன்மீது பாய்ந்துவிடுமோ என்று சதா காலமும் அஞ்சியது அந்த மயில். ஆகையால், அமைதியாய் பத்திரமாய் வாழ்வதற்காக, நெடுந்தூரத்துக் கப்பால் உள்ள தண்டகாரண்யத்தில் ஒரு குன்றின்மீது அது வளர்ந்து வந்தது. ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும், சூரிய தேவனையும் அநாதியான ஞான புருஷனையும் போற்றிப் புகழும் ஒரு மந்திரத்தை, மகா இனிய காகலி ராகத்தில் இடைவிடாது மயில் பாடி வந்தது. அந்த மந்திரமே அதைச் சகல தீமைகளினின்றும் காப்பாற்றி வந்தது.

இவ்விதம் அது தன்னை ஜாக்கிரதையாயும் விழிப்புடனும் தற்காத்து வந்தும், கூர்மையான கண்களையுடைய ஒரு வேடன் அதைக் கண்டுவிட்டான். தான் கண்ட மயிலைப்பற்றி, வேடன் தன் மகனுக்குச் சொன்னான்.

இதே வேளையில், காசி மன்னன் பிரம்மதத்தனின் மனைவியான ராணி கேமா, ஓர் அதிசயக் கனவுகண்டாள்

சொர்ண மயமான ஒரு மயில், வெகு அழகாகத் தர்ம சாஸ்திர நுட்பங்களை விளக்கி உபதேசித்ததுபோல, அந்தக் கனவிலே அவள் கண்டாள். அதை மன்னனிடம் தெரிவித்து, அந்தக் கனவை நிறைவேற்ற வேண்டு மென்று மன்னனை ராணி வேண்டிக் கொண்டாள். கனவிலே கண்ட காட்சியும் கேட்ட உபதேசமும், அவள் மனத்தைக் கவிந்து சஞ்சலத்தில் ஆழ்த்தின.

மன்னன் உடனே தன் மந்திரிகளையும் வேதசாஸ்திர பாரங்கதர்களான பிராமணர்களைவும் ஒரு சபை கூட்டினான். ராணியின் கனவை அவர்களிடம் சொன்னான். இந்த மண்ணுலகிலே அத்தகைய ஒரு பட்சி எங்கேயாவது இருக்கிறதா என்று அவர்களைக்கேட்டான்.

பண்டிதரும் பிரதானிகளும் ஒருவருக் கொருவர் காதோடு காது வைத்துக் கிசுகிசு என்று கலந்தாலோசித்த பின்பு, யாவரினும் முதிய - அறிவில் மிகுந்த - ஒரு கிழவர் சொன்னார் :

"ஏ ராஜனே ! உன் ராஜ்யத்திலுள்ள சகல வேடர்களும் உன் சந்நிதானத்துக்கு வர வேண்டுமென்று கட்டளை பிறப்பி. அவர்களிலே எவனாவது ஒருவன் அந்தப் பட்சியைக் கண்டிருக்கக் கூடும். யாருமே கண்டிராவிட்டால், அனைவரும் சேர்ந்து தேடி அதைக் கண்டு பிடிக்க வேண்டு மென்று அவர்களுக்கு உத்தர விடலாம்."

முதலிலே அந்தப் பட்சியைப் பார்த்த வேடனை, ஒருவாறு கண்டுபிடித்தார்கள். அவனும் தன் வலையை எடுத்துக் கொண்டு துரிதமாய்க் கிளம்பினான். பொன் மயிலைப் பிடிக்க, தன் வாழ்நாள் முழுவதும் அவன் எத்தனையோ முயற்சி செய்தும் பயன்படவில்லை. ராணி

கேமா, தன் ஆசை நிறைவேருமலே, ஏங்கி ஏங்கி மாண்டுவிட்டாள்.

மன்னன் மகா கோபமும் பெருந் துயரும் அடைந்தான். அந்தக் கோபத்திலே, அவன் ஒரு பொன் பட்டயம் செய்தான். அதிலே, 'அதோ, வெகு தூரத்திலே தண்டகாரண்யக் குன்றின்மேல் வாழும் பொன் மயிலின் புலாலை எவன் ஒருவன் உண்ணுகிருனே அவன் நித்ய யௌவனம் பெற்றுச் சிரஞ்சீவியாய் வாழ்வான்' என்ற வாசகத்தையும் செதுக்கி வைத்தான்.

ஒருவனுக்குப் பின் ஒருவனுக ஆறு மன்னர்கள், அந்த மயிலைப் பிடிக்கத் தங்கள் வாழ்நாள் முழுதும் முயன்று தோற்ருர்கள். கடைசியிலே, ஏழாவது மன்னன், தன் ராஜ்யத்திலேயே மகா சாமர்த்தியசாலியான ஒரு வேடனைத் தேர்ந்து, தண்டகாரண்யத்துக்கு அனுப்பினன்.

வேடன் வெகு எச்சரிக்கையாய்ச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும், சூரிய தேவனையும் அநாதியான ஞான புருஷனையும் போற்றிப் புகழும் ஒரு மந்திரத்தை மகா இனிய காகலி ராகத்தில் அந்த அதிசயப் பட்சி இடைவிடாது பாடி வந்ததை அவன் கேட்டான். ஓ! இந்த மந்திரம்தான் அதை இவன் கண்ணியில் விழாது காப்பாற்றி வருகிறதாக்கும்!

உடனே அவனுக்கு ஒரு யுக்தி தோன்றியது. ஒரு நாள் அதிகாலையில் கீழ்வானம் வெளுக்கு முன்னே, தன்னிடம் பழகிய தொரு பெண்மயிலை எடுத்துக் கொண்டு சென்று, அங்கே விட்டான். தான் ஒரு புதருக்குப் பின்னே மறைந்து கொண்டு, கைகளைத் தட்டிச் சமிக்ஞை செய்தான். பெண் மயிலும் அந்த ஜாடை

யறிந்து, 'கூ' என்று அகவியது. தண்டகாரண்யத்தில் வாழ்ந்துவரும் இத்தனை காலமாய் ஒருநாளும் தான் கேட்டிராத இந்தக் குரலை, பொன் மேனிபடைத்த அந்த ஆண்மயில் கேட்டதும், தன் மந்திரத்தை எல்லாம் மறந்தது; தானுமே ஆனந்த பரவசத்தோடு கூவிக் கொண்டு, தளுக்கிக் குலுக்கும் அந்தப் பெண் மயிலைச் சந்திக்க ஓடி, வேடனின் கண்ணியிலே விழுந்து விட்டது.

வேடனும் ஜய குதூகலத்தோடு, காசி மன்னனிடம் அந்தப் பொன் மயிலைக் கொண்டு சென்றான். அரசன் அதற்குக் கௌரவமாய் ஓர் ஆசனம் அளித்தான்.

சிறைப்பட்டிருந்தும் இவ்விதம் கௌரவிக்கப் பெற்ற அந்தப் பொன் மயில், "என்னைப் பிடித்துவர ஏன் வேடரை அனுப்பினாய் ?" என்று மன்னனைக் கேட்டது.

"எவன் ஒருவன் உன் புலாலைத் தின்கிறானோ அவன் நித்ய யௌவனம் பெற்றுச் சிரஞ்சீவியாவான். அதனால்தான் உன்னைப் பிடித்துவரச் செய்தேன்" என்று மன்னன் பதில் அளித்தான்.

'சாவில்லாத அமரத்துவம் பெறுவதற்காக உயிர்ப் பிராணிகளைக் கொல்லுவதாமே; என்ன முட்டாள்தனம்!' என்றெண்ணிச் சிரித்தது மயில். பின்பு அது முன் ஜன்மத்தில் தான் புரிந்த நற்செயல்களின் பயனாகவே இந்தப் பொன் தோகை பெற்றிருப்பதாக மன்னனுக்கு எடுத்துரைத்தது.

மேலும், "எ ராஜனே! ஓர் உயிரின் சாவிலிருந்து மற்றோர் உயிருக்கு எப்படி அமரத்துவம் பிறக்கும்? எல்லா உயிரும் ஒன்றே யாகும். கருணை ஒன்றுதான், அமரத்துவம் அளிக்கும்" என்று அந்தப் பொன் மயில் பாடியது.

இவ்வாறு தர்ம சாஸ்திர ரகசியத்தை விளக்கி உபதேசித்த பொன் மயிலை, மன்னனும் ராணியும் வியந்து பணிந்து சுற்றி வலம் வந்தார்கள். அதைப் பிடித்து வந்த வேடனே, தன்னை யறியாமலே திடீரென்று உரு மாறிக் காஷாய முடுத்த பிட்சுவாய் நின்றான்.

---

சாலைகள்

இந்தியாவின் நிலப்பரப்பு 12 லட்சத்து 70 ஆயிரம் சதுர மைல். மக்கள் தொகை 38 கோடியே 20 லட்சம். நாட்டில் உள்ள கப்பி போட்ட சாலைகளின் நீளம் 1,21,617 மைல். கப்பி போடாத சாலைகளின் நீளம் 1,91,051 மைல். இந்தச் சாலைகளைப் பெருவாரியான கால் நடைப் பிரயாணிகள் உபயோகிக்கின்றன. அதைத் தவிர ஒரு கோடிக்கு மேற்பட்ட குதிரை, மாட்டு வண்டி முதலியவைகளும், ஒரு லட்சத்து முப்பதாயிரம் லாரிகளும், நாற்பத்தையாயிரம் பஸ்களும், தனியார் கார் உள்பட மூன்று லட்சம் வேறு மோட்டார் வாகனங்களும் பயன்படுத்தி வருகின்றன.

# மின்மினிப் பூச்சி

பறக்கும் பூச்சி ஒன்று இரவில் ஒளி வீசுகிறது. அது மின்மினிப் பூச்சி. அதைத் துரத்திப் பிடிக்கின்றனர் சிறுவர்.

கிரேக்கர்களும் ரோமரும் சிறப்புற்று விளங்கிய காலத்தில் அந்தி வேளையில் அடிமைகள் மின்மினிப் பூச்சிகளை விரட்டிப் பிடித்து, தங்கள் எஜமானிகளிடம் கொடுத்தார்கள். அந்தச் சீமாட்டிகள் அவற்றைக் கொண்டு தங்கள் கூந்தலையும் கைகளையும் அலங்கரித் தார்கள். வளங்கொழிக்கும் சிறு தெய்வங்கள் என்று இந்தியாவில் அப் பூச்சிகள் கருதப்பட்டதும் உண்டு. ஜப்பானில் ஆயிரக் கணக்கான மின்மினிப் பூச்சிகளை பிள்ளைகள் சக்கரவர்த்தியின் அரண்மனைமுன் விடு வார்கள். அது சக்கரவர்த்தியைக் கௌரவிப்பதாகும்.

பால்டிமோரில் பள்ளிப் பிள்ளைகள் 1948-ஆம் ஆண்டு முதல் வேனிற் காலங்களில் மின்மினிகளைப் பிடித்து, டாக்டர் வில்லியம் டி. மெக்கல்ராய்க்கு விற்கிறார் கள். மெக்கல்ராய் என்பவர் ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தின் உயிர்நூல் பேராசிரியர்; மெக்காலம்-பிராட் நிலையம் என்னும் உயிர்நூல் ஆராய்ச்சி ஸ்தாபனத்தின் தலைவர். அசாதாரணமான பூச்சிகளைப் பற்றி அவர் ஆராய்ச்சி நடத்தி வருகிறார். அதற்காச் சென்ற பத் தாண்டுகளில் அவர் லட்சக் கணக்கான மின்மினிப் பூச்சி களை விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்.

சென்ற ஆண்டில் மட்டும் பிள்ளைகள் நாலு லட்சம் மின்மினிப் பூச்சிகள் பிடித்து அவருக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டில் அவருக்கு இன்னும் அதிகமாக வேண்டும். அவருக்கு உயிருள்ள பூச்சிகளே வேண்டும்.

மின்மினிப் பூச்சியின் வால் ஏன் ஒளி வீசுகிறது? அதற்கு எவ்வாறு ஒளி உண்டாகிறது? இவற்றை அறிய விஞ்ஞானிகள் விரும்புகிறார்கள். டாக்டர் மெக்கல்ராய் பல ஆண்டுகளாக இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்.

முதலில் அவர் பல்லாயிரக் கணக்கான மின்மினிப் பூச்சியின் வால்களைப் பிரித்தெடுத்து, அவற்றை ஒரு பெரிய உரலில் போட்டு உலக்கை கொண்டு பொடியாக்கினார்.

மிகவும் வருந்தி அவர் பல சோதனைகள் பார்த்து, மின்மினிப் பூச்சியில் லூசிபெரின், லூசிபெரேஸ் என்னும் இரண்டு ரசாயனப் பொருள்கள் இருப்பதைக் கண்டு பிடித்தார். அவற்றைப் பிரித்தெடுத்து, பின்னர் கலந்தால், அவை ஒளி உண்டாக்குகின்றன.

மின்மினிப் பூச்சியின் வாலில் வேறு ரசாயனப் பொருள்கள் இருக்கக்கூடும் என்று கருதி மீண்டும் ஆராய்ச்சி நடத்தி, அடனூஸின் டிரைபாஸ்பேட்டும் பிராணவாயுவும் மாங்கனிஸியமும் உள்ளது என்று கண்டு பிடித்தார். ரசாயனப் பொருள்களைத் தனித் தனியே பிரித்து, பின்னர் அவற்றை வெவ்வேறு அளவுகளிலும் வெவ்வேறு வகையாகவும் சேர்த்துச் சோதனை செய்து பார்த்து "ஏடிபி" எனப்படும் அடனூஸின் டிரைபாஸ்பேட் மிக முக்கியமானதாக இருக்கக் கண்டார்.

நரம்பினின்று எற்படும் ஓர் உணர்ச்சியால் ரசாயன பொருள்கள் பிரிந்துவிடுகின்றன என்றும், அதனால் வால் ஒளி வீசுகின்றது என்றும் அவர் கண்டுபிடித்தார். மீண்டும் ஓர் நரம்பு உணர்ச்சியால் பிரிந்தவை இணைந் தால், ஒளி மறைந்து விடுகிறது என்பதும் அவருக்குத் தெரியவந்தது.

விஞ்ஞானிகள் விஷயங்களை அறிந்து அந்த அறி வால் இன்புறமட்டும் விரும்புவதில்லை; அவர்கள் அந்த அறிவைப் பயன்படுத்தவும் விரும்புகிறார்கள். எனவே, டாக்டர் மெக்கல்ராயும் தாம் பெற்ற அறிவைப் பயன் படுத்த விரும்புகிறார். நம் உடலிலுள்ள சக்தி நாம் வேண்டும்போது எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை மின்மினிப் பூச்சி ஆராய்ச்சியால் அவர் அறிந்து கொண்டார்.

எடிபி என்னும் ரசாயன சக்தி எவ்வாறு அது மனித உடலில் பல்வேறு சக்திகளாக மாறுகிறது என்பதையும், எவ்வாறு அது மனித உடலில் பாய்கிறது என்பதையும் அறிய விஞ்ஞானிகள் இப்பொழுது முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

பால்டிமோரில் மின்மினிப் பூச்சிகளைப் பிடித்துக் கொடுக்கும் சிறுவரும் இந்த ஆராய்ச்சிக்குத் துணை செய்கின்றனர்.

# உலக இசை பாங்கு

ஜான் டி. ரீட்

இசை என்பதற்கு எத்தகைய எல்லையும் இல்லை. அது நாட்டுக்குரிய எல்லைகளைக் கடந்து உலகுக்கே உரியதாக விளங்குவது. ஆதலால், அதற்கு ஓர் உலக பாங்கு வேண்டும். அத்தகைய ஒரு ஸ்தாபனம் இந்த ஆண்டில் போர்ட் வாயின் பில்ஹார்மினிக் ஆர்ச்செஸ்டிராவின் தலைவராகிய ஐகார் பியூக்டாப் என்பவரால் நிறுவப் பெற்றது.

நார்வே நாட்டு சுர கர்த்தாக்கள் எழுதியவற்றில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தபோது, பல நாடுகளின் சுர கர்த்தாக்கள் எழுதியவற்றையும் திரட்டவேண்டும் என்னும் எண்ணம் அவருக்குத் தோன்றிற்று.

பல நாடுகளின் சிறந்த பாடல்களையும் தொகுத்து வைக்க அவர் கருதினார். அதாவது அவர் அகில உலக இசை பாங்கு ஒன்றை அமைக்க எண்ணினார். டென்மார்க், பின்லாந்து, நார்வே, சுவீடன், பெல்ஜியம், நெதர்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் சிறந்த சுர கர்த்தாக்களின் மிகச் சிறந்த பாடல்களை அனுப்பி வைத்தன. இவ்வாறு உலக இன்னிசை பாங்கு உருவாயிற்று. நாளாக ஆக அந்த பாங்குகள் இசைச் செல்வம் பெருகும்.

அந்த பாங்கின் உறுப்புகளாக உள்ள நாடுகள் இசைப் பதிவுகளை இசை பாங்குக்கு அனுப்புகின்றன. எல்லா நாடுகளையும் சேர்ந்த இசைக்கலைஞர் இந்த பாங்கிலிருந்து அந்த இசைப் பதிவுகளைக் கடனாகப் பயன்படுத்தலாம்.

இப்பொழுது இந்த பாங்கின் மூலதனம் நாற்பத்தேழு சாகித்தியங்கள். இது மிகக் குறைவான பொக்கிஷமே. எனினும், சாகித்தியங்களின் தரம் மிகவும் உயர்ந்தது.

இந்த இன்னிசை பாங்குக்கும் மற்ற பாங்குகளுக்கும் ஒரு வேறுபாடு உண்டு. இந்த பாங்கு வட்டி வாங்குவதில்லை.

இசைக் கலைஞர்களுக்குள் ஒருவருக்கொருவர் பொருமை இருப்பது இயல்பு. ஆதலால் சிறந்த சாகித்தியங்களைத் தேர்ந்தெடுப்பது எளிதன்று, அமெரிக்காவில் ஆறு பேர் கொண்ட குழுவால் அவை தேர்ந்தெடுக்கப்பெற்றன,

இந்தியாவும் மற்ற ஆசிய நாடுகளும் இதில் சேர்ந்து, தங்கள் இன்னிசைச் செல்வங்களை அனுப்புமா?

---

Edited, Printed and Published by A. K. CHETTIAR at Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18.

# கவுண்டர் & கம்பெனி
## (பிரைவேட்) லிமிடெட்

| | |
|---|---|
| தலைமை ஆபீஸ்: | கிளை ஆபீஸ் & ஷோரூம் |
| கூட்ஸ் ஷெட் ரோடு | 7 69, ஜெயில் ரோடு |
| பொள்ளாச்சி. | 3 கோயமுத்தூர் |

## கோயமுத்தூர் & நீலகிரி ஜில்லாக்களுக்கு:


டாடா-மெர்சிடெஸ்-பென்ஸ் டீசல் டிரக்,

ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிள்

விற்பனையாளர்கள்.

**நா. மகாலிங்கம், B.Sc., A.M.I.E., M.L.A.,**

மானேஜிங் டைரக்டர்.




# முன்னேற்றத்தில் அருஞ்செயல்

முற்போக்கான நாடுகளுக்குப் பல துறைகளில் நம் நாடு பின்தங்கியுள்ளது. துரித முன்னேற்றத்திற்கு உதவுவது நம் ஒவ்வொருவருடைய—தனிப்பட்டவர்கள், ஸ்தாபனங்கள்—பொறுப்பாகும். ஒன்றுபட்டு உழைப்போமாக.

## T.V. சுந்தரம் ஐயங்கார் அன் சன்ஸ் பிரைவேட் லிமிடெட் - மதுரை.

இதர T.V.S. ஸ்தாபனங்கள் : மதராஸ் ஆட்டோ சர்வீஸ் பி. லிட்., சதர்ன் ரோட்வேஸ் பி. லிட்., சுந்தரம் மோட்டார்ஸ் பி. லிட்., சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பி. லிட்., மதராஸ் மோட்டார் இன்ஸ்யூரன்ஸ கம்பெனி லிட்., சுந்தரம் பினன்ஸ் பி. லிட்., இந்தியா மோட்டார் பார்ட்ஸ அன் அசெஸசரீஸ பி. லிட்., சுந்தரம்ஸ் பி. லிட்.,